ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 16 புதன்கிழமை (02.10.2002) தொலைபேசி- 2223378 ஒலி 287

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு இரகசிய விஜயம்

## இராணுவ அதிகாரிகளுடன் முக்கிய ஆலோசனை

(திருநெல்வேலி)

அமெரிக்க இராணுவப் புலானய்வுப் பிரிவைச் சேர்ந்த எட்டு இராணுவ அதிகாரிகள் குடாநாட்டிற்கு இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டு குடாநாட்டின் இராணுவ முன்னரங்க நிலைகளுக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் விசேட விமானம் மூலம் பலாலி விமானத் தளத்தில் வந்திறங்கிய அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் தென்மராட்சிப் பகுதிகளான முகமாலை, எழுதுமட்டுவாழ் மற்றும் நாகர்கோவில் ஆகிய பகுதிகளில் உள்ள இராணுவ முன்னரங்க நிலைகளுக்குச் சென்று பார்வையிட்டுள்ளதுடன் பாதுகாப்பு நிலவரம் மற்றும் இராணுவ ஒத்துழைப்புக் குறித்தும் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார்கள்.

இதேவேளை நேற்றைய தினம் மீண்டும் தென்மராட்சிப் பகுதிகளான மட்டுவில் மற்றும் சரசாலை ஆகிய பகுதிகளுக்குச் சென்ற அமெரிக்க அதிகாரிகள் அங்குள்ள இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளனர்.

அதேவேளை பொன்னாலை மற்றும் மண்டைதீவு, காரைநகர் ஆகிய இடங்களை அமெரிக்க அதிகாரிகள் பார்வையிட்டதுடன் கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும் தற்போதைய தீவுப்பகுதி நிலைமை தொடர்பாக விரிவாகக் கேட்டறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டின் கள நிலவரங்களை நேரில் அவதானித்துச் சென்ற அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் பலாலிப் படைத்தளத்தில் படை அதிகாரிகளுடன் முக்கிய சந்திப்பொன்றில் கலந்து கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கப் புலனாய்வு அதிகா

(10ம் பக்கம் பார்க்க)

# அரசு- புலிகள் சமாதானப் பேச்சில்
# ஜனாதிபதியும்- பிரதமரும் இணக்கம்




## இருவரினதும் பொது உரைகள் உறுதிப்படுத்துகின்றன

(நமது நிருபர்)

**இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானப்பேச்சுவார்த்தை மூலம் பொதுவான இணக்கத்திற்கு வருவதற்கு நடைபெறும் முயற்சிகள் பாராட்டுக்குரியது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும்,**

**தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானத்திற்கு வந்துள்ள இச் சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்தாது போனால் சமாதானம் என்றைக்கும் எற்படப்போவதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் தெரிவித்துள்ளனர்.**



சர்வதேச சிறுவர்தினம் தொடர்பாக இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது ஜனாதிபதி சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்:

பிரச்சினைகளைத் தீரபதற்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வே சிறந்த முறையாகும். 1994, 1999ம் ஆண்டுகளில் நான் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் மூலம் இட்ட அடித்தளத்தில் இருந்துதான்

(10ம் பக்கம் பார்க்க)

# மட்டு–திருமலை ஏ–15 வீதியை

# உதவி அத்தியட்சகர் கொலை

## திறக்கக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

### பொலிஸ் காவல் அரண் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திருகோணமலை ஏ-15 நெடுஞ்சாலையை 24மணி நேரமும் திறந்து போக்குவரத்துக்கு அனுமதிக்க வேண்டுமென்று கோரி, நேற்று மட்டக்களப்பில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வாழைச் சேனைப் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இடம் பெற்ற இவ்வார்ப்பாட்டத்தினால் அங்கு வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக மட்டக்களப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வாழைச்சேனைப் பொலிஸ நிலைய

(10ம் பக்கம் பார்க்க)

## மூவருக்கு மரண தண்டனை!

### கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

சுங்கத்திணைக்கள உதவி அத்தியட்சகர் சுஜீத் பிரசன்ன பெரேராவின் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மூன்று நபர்களுக்கும் கொழும்பு உயர் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

சுங்கத் திணைக்கள தற்போதைய உதவி அத்தியட்சகர் அனுராவீரவன்ச மற்றும் வஜீர இந்திரஜித், சுனில் உதயகுமார ஆகிய மூவருமே மரண தண்டனை பெற்றவர்களாவர்.

2001ம் ஆண்டு மார்ச் மாதம் சுஜீத் பிரசன்ன பெரேராவை கொலை செய்ய உடந்தையாக இருந்தமை தொடர்பாக சட்டமா அதிபர் சந்தேக நபர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இவ் வழக்கை விசாரித்த நீதியரசர்கள் சிறிஸ் கந்தராசா, எரிக் பஸநாயக்கா, மச்வலபரனகம ஆகியோரே மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தனர். (ம)

## ஜேர்மன் உயர்மட்டக் குழு தமிழ்ச்செல்வனை -இன்று சந்திக்கும்

(வவுனியா)

இலங்கை வந்துள்ள ஜேர்மன நாட்டு நீதிபதிகள், சட்டத்தரணிகள் அடங்கிய குழு இன்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளது.

இலங்கையின் தற்போதைய சமாதானச் சூழ்நிலை குறித்தும், தம் நாட்டவர்கள் இலங்கைக்கு சுற்றுலா வரக்கூடிய நிலை உளளதா

(10ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் யாழ். படைத்தளபதி- புலிகள் சந்திப்பு

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மற்றும் குடாநாட்டு படை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்ட மாநாடு ஒன்று நேற்று நடைபெற்றது.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்ற இம் மாநாட்டில் குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்தும், மக்களின் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக தீவகத்தின் நிலைமை குறித்தும் அங்கு பொதுமக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தும ஆராய முற்பட்ட போதும் தீவகப் பிரச்சினைகள் தொடர்பாக பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாக ஆராய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகள் சார்பில் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, அரசியல் பிரமுகர் பாப்பா ஆகியோரும் இராணுவத்

(10ம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!
நாளை உங்களின்
சங்கு நாதம்
விஷேட அரசியல்
கட்டுரையுடன்
தவறாது கேட்டு வாங்குங்கள்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராசி பலன்

2-1?-2002
(புரட்டாதி 16. புதன்)
ஏகாதசி பி. இ 2 18 வரை
பூசம் காலை 8 03வரை
இராகு காலம் 12.02-1.52
நல்ல நேரம் 4,32-6 02

ஏகாதசி விரதம்

**மேடம்**
மனப்பதற்றம், காரிய தாமதம், கடும் முயற்சி, ரோக நிலை

**இடபம்**
பிரயாண சுகம், காரியம் கைகூடும் குடும்பத்தில் மகிழ்ச்சி, புதிய பொருள் சேர்க்கை

**மிதுனம்**
மாதர் நட்பு, முயற்சி கைகூடும், சென்ற இடத்தில் செல்வாக்கு தன விரயம்.

**கடகம்**
ஆழ்ந்த சிந்தனை, தெய்வ சிந்தை, எடுத்த காரியம் கைகூடும், சகோதரர் உதவி,

**சிங்கம்**
பெரியோர் மனஸ்தாபம், அமைதிக் குறைவு, திடீர் பயணம். சிறுவியாதி

**கன்னி**
நினைத்த காரியம் நிறைவேறும், பொருள் சேர்க்கை, தொழில் விருத்தி: குடும்ப சுகம்.

**துலாம்**
தொழில் முன்னேற்றம் முயற்சி கைகூடும், கீர்த்தி. உற்சாகம்,

**விருச்சிகம்**
பிரயாணம். திட்டமிடல் வீண்பயம், உடல் நலக் குறைவு

**தனுசு**
நண்பர்கள் விரோதம், போசன சுகம், முயற்சி தடங்கல், உடல் வியாதி,

**மகரம்**
நல்ல வரவேற்பு, களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், அபூர்வ சந்திப்பு,

**கும்பம்**
உடல் ஆரோக்கியம், திடீர் பயணம், முயற்சி பலிதம், தொழில் கஷ்டம்,

**மீனம்**
உறவினர் சந்திப்பு, மனச் சஞ்சலம், முயற்சி தாமதம், கௌரவக்குறைவு,

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி வ. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் சி. சிவராசாவும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஆ. இராஜகோபால், யாழ் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி க. சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-3)

**காவலாளி.**
நிறுவன விரிவுரையாளரால் தாக்கப்பட்டுள்ளார்.

விரிவுரையாளருக்கும் காவலாளிக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு முற்றியே காவலாளி தாக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது இச்சம்பவத்தில் காயமடைந்த காவலாளி யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-5-216)

# சிறுவர் துஷ்பிரயோகம் அதிகளவில தீவக பகுதியிலேயே இடம்பெறுகிறது

## சிறுவர் பாதுகாப்பு நிதியத்திட்ட அலுவலர் தற்பரன் கவலை

(காரைநகர்)

சிறுவர் துஷ்பிரயோகம் அதிகஅளவில் இடம் பெறும் பிரதேசங்களில் தீவகப் பிரதேசங்கள் முதல் இருஇடங்களையும் பெற்றுவருகின்றன இதுமிகவும் துன்பகரமான ஒருவிடயமாகும்என யாழ்ப்பாணம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்திட்ட அலுவலர் ஜெ.தற்பரன் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் புளியங்கூடல் இந்து வாலிபர்சங்க மண்டபத்தில் ஊர்காவற்துறை உதவிஅரசாங்கஅதிபர் பிரிவின் சிறுவர்தினவிழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்இவ்வாறு தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை உதவி அரசஅதிபர் தலைமையில் நடைபெற்ற இச்சிறுவர்தின விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

ஒருபிரதேசத்தில் இருந்து ஒருவைத்தியர் உருவாக்கப்பட்டால் அதற்கு அப்பிரதேச மக்கள் சமுதாயம் உரிமை கோர முடியும் எனின்சிறுவர் துஷ்பிரயோகத்தில் முதல் இருஇடங்களையும் தீவகபிரதேசங்களே பெற்றுக்கொள்கின்றது என்றதுன்பகரமான நிலைமைக்கும் இப்பிரதேச மக்களும் சமூகமுமே பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வருடத்தில் கடந்த8 மாதங்களில் அதிகஅளவு சிறுவர் துஷ்பிரயோகங்க இத் தீவகப்பிரதேசத்திலேயே இடம்பெற்றுள்ளன குறைந்தது ஒருமாதத்தில் இருதுஷ்பிரயோக சம்பவம் என்றாலும் நடைபெற்றுள்ளது.

இவற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு சிறுவர்பாதுகாப்பு நிதியம் முன்வந்தாலும் அதற்கு இப்பிரதேசமக்களும் பூரணஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு பூரண ஒத்துழைப்பு கிடைக்கும்பட்சத்தில் மாவட்டச்சிறுவர்கண்காணிப்புக்குழு முழுமையாக உதவிசெய்யும என்றும் அவர் தெரிவித்தார். (த-246)

## சமூகசேவைப் பிரிவி முதியோர் சிறுவர் தினவிழா

வடமராட்சி தெற்கு பிரதேச செயலகத்தின் சமூக சேவைப் பிரிவினரால் நடாத்தப்படும் சர்வதேச முதியோர், சிறுவர் தின நிகழ்வுகள், இன்று காலை 10 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு வைத்தியகலாநிதி கே. மயிலேறும்பெருமாள் பிரதம விருந்தினராகவும், தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் கௌரவவிருந்தினராகவும், பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி எஸ். புஸ்பலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-5-23)

# தீவக கல்வி வலயத்தில் இடம்பெற்ற முதியோர் சிறுவர்தின போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச முதியோர் சிறுவர் தின நிகழ்வை முன்னிட்டு, தீவகக் கல்வி வலயத்தில் இடம் பெற்ற போட்டி முடிவுகள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வெளியிடப்பட்டுள்ளது.

அம்முடிவுகளின் விபரம் வருமாறு,

நெடுந்தீவுப் பிரதேசசெயலர் பிரிவு

கட்டுரை தரம் 10-11பிரிவு1
1ம் இடம் க. மலினி யாழ் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி
2ம் இடம் ஞா. அமலஞானி யாழ் நெடுந்தீவு மகாவித்தியாலயம்
3ம் இடம் பே. அனுஷியா யாழ். நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி

கட்டுரை (தரம் 11-12) பிரிவு 11
1ம் இடம் பி ஒஸ்ரின்வஸ்ரலா யாழ். நெடுந்தீவு றோ. க. மகளிர் கல்லூரி
2ம் இடம் யே. பேனாட்ராஜ் யாழ் நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி
3ம் இடம் ம யூ இமெல்டா யாழ். நெடுந்தீவு றோ. க. மகளிர் கல்லூரி

கவிதை (தரம் 10-11) பிரிவு 1
1ம் இடம் பி. அன்ரிஸ் மிலன் யாழ். நெடுந்தீவு மகா வித்தி
2ம் இடம் க. மாலினி யாழ். நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி
3ம் இடம் செ அமல டொறின் யாழ் நெடுந்தீவு மகாவித்தி

கவிதை (தரம் 12-13) பிரிவு 11
1ம் இடம் யோ. கலோரின் அஸ்ரினா யாழ் நெடுந்தீவு.றோ.க. மகளிர் கல்லூரி
2ம் இடம் அ. யே அனுஷன் யாழ். நெடுந்தீவு மகா வித்தி
3ம் இடம் றெ. புஸ்ப இமெல்டா யாழ். நெடுந் றோ. க. மகளிர்கல்லூரி

வேலணை பிரதேசசெயலர் பிரிவுகட்டுரை (தரம் 10-11) பிரிவு 1
1ம் இடம் ஸ்ரீ. அஜந்தா யாழ். நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஸ்ட வித்தி
2ம் இடம் இ'விஜயசிறி யாழ். வேலணை கிழக்கு மகா வித்தி
3ம் இடம் ப. சுவர்ணலதா யாழ் நயினாதீவு கணேசா கனிஸ்ட வித்தி

கட்டுரை (தரம் 12-13) பிரிவு 11
1ம் இடம் க. ஜெயபாலினி யாழ் புங்குடுதீவு மகாவித்தி
2ம் இடம் ப சமிளா யாழ். நயினாதீவு மகாவித்தி

கவிதை (தரம் 10-11) பிரிவு-1
1 ம் இடம் க தேவபாலா யாழ். வேலணை சேர். வை. துரைச்சுவாமி ம.ம வித்தி.
2ம் இடம் த.ஜனுஜா யாழ். சரவணை நாகேஸ்வரி வித்தி.
3 ம் இடம் சி.வரதலட்சுமி யாழ் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி.

கவிதை (தரம்-12-13) பிரிவு-11
1 ம் இடம் பா. நிஷாந்தினி யாழ் வேலணை சேர். வை. துரைச்சுவாமிம.ம வித்.
2 ம் இடம் ப.குகப்பிரியா யாழ் நயினாதீவு மகாவித்தி.
3 ம் இடம் ப.பகிர்தா யாழ் நயினாதீவு மகா வித்தி.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவு

கட்டுரை (தரம்-10-11) பிரிவு-1
1 ம் இடம் இ. தயாளினி யாழ்.கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.
2 ம் இடம் எ அல்பிரட் விக்ரர் யாழ். புனித அந்தோனியார் கல்லூரி.
3 ம் இடம் க சோபா யாழ். கரம்பன் சண்முகநாதமகா வி

கட்டுரை (தரம்-12-13) பிரிவு-11
1 ம் இடம் பிரவீனா யாழ். யாழ்ற்றன் கல்லூரி.
2 ம் இடம் அ.அனிஸ்ரா யாழ்.கரம்பன் சிறிய புஸ்பம மகளிர் வித்தி.
3 ம் இடம் கு மதனராசா யாழ்.புனித அந்தோனியார் கல்லூரி.

கவிதை (தரம்- 10-11) பிரிவு-1
1 ம் இடம் அ.ரெஜீனா. யாழ் கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.
2 ம் இடம் பா.சங்கீதா யாழ். யாழ்ற்றன் கல்லூரி
3 ம் இடம் யோ. குணேந்தினி யாழ். நாரந்தனை றோ. க.மகா வித்தி.

கவிதை (தரம்-12-13) பிரிவு-11
1 ம் இடம் க.அனிஉஷா யாழ் கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.
2 இடம் வ யோகமலர் யாழ்.யாழ்ற்றன் கல்லூரி.
3 ம் இடம் கெ.தனுஜா யாழ் கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி. (தொடரும்)

# மயிலந்தனை படுகொலை வழக்கு விசாரணைஇன்று கொழும்புஉயர் நீதிமன்றில்

(கொழும்பு)

கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மயிலந்தனைப் படுகொலைகள் சம்பந்தமானவழக்கு விசாரணை கொழும்பு உயர் நீதி மன்றத்தில் மீண்டும் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

இக்கிராமத்தில் 35 தமிழ் மக்களை படுகொலை செய்ததுடன் 24பேரை கொலை செய்ய முயற்சித்தார்கள் என்றகுற்றச்சாட்டின்பேரில், 21 இராணுவ வீரர்கள் மீது சட்டமா அதிபர் வழக்குத் தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வழக்கு விசாரணை கொழும்பு உயர்நீதிமன்றத்தில், உயர் நீதிமன்ற நீதிபதி எஸ். சிறிஸ்கந்தராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது குற்றம்சாட்டப்பட்ட 21 இராணுவவீரர்களில் 19பேரே ஆஜராகி இருந்தனர்.

ஏனையோரில் ஒருவர் இறந்து விட்டதாகவும், மற்றொருவர் காணாமல் போய்விட்டதாகவும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

# 2004 ம் ஆண்டு ஜனவரிமுதல் ஆண்டு 5 புலமைபரிசிலுக்கு வருடவருமானம் ரூ. 24,000

(கொழும்பு)

5ம் தர புலமைப் பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் 2004ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் உதவிப்பணம் பெறும் சட்டபூர்வ பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களின் வருடாந்த மொத்த வருமானம் 6 ஆயிரம் ரூபாவில் இருந்து 24 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது இதனடிப்படையில் மாத வருமானம் 2000 ரூபாவாக இருக்க வேண்டும்.

2003ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத்தோற்றி சித்திபெறும் மாணவர்கள் 2004ம் ஆண்டு ஜனவரி இப் புதியவருடாந்த மொத்த வருமானத்தை அடிப்படையாக வைத்து விண்ணப்பிக்க வேண்டும்என மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு நாட்டில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் எச் ஆர் டி/ ஈ.கியூ/டி. 2002 / 20ம் இலக்க சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2002ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று 2003 ஜனவரி மாதம் முதல் உதவிப் பணம் பெறும் மாணவர்களுக்குப் பொருந்தாது என்றும் அவர்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வாறானவருடாந்தவருமானம் 6 ஆயிரம் ரூபாவாக அதாவது மாதவருமானம் 500 ரூபாவாக இருக்க வேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (வ)

# 2003-ம் ஆண்டு பாடசாலை தவணைஆரம்பமும்முடிவும்

(யாழ்ப்பாணம்)

2003ம் ஆண்டு நடைபெறவுள்ள பாடசாலை தவணை அட்டவணை ஒன்றை மனிதவள அபிவிருத்தி கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் பதில செயலாளர் கீதா ராஜபக்ஷ சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும் சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ், சிங்கள பாடசாலைகளுக்கான முதலாந்தவணை 2003 ஜனவரி 1ம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஏப்பிரல் 10ம் திகதி வியாழக்கிழமை வரையும்,

இரண்டாம் தவணை 2003 மே 19 திங்கட்கிழமை தொடக்கம் ஆகஸ்ட் 8ம் திகதி வெள்ளிக்கிழமை வரையும்,

மூன்றாம் தவணை 2003 ஆகஸ்ட் 25ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நவம்பர் மாதம் 28ம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் நடைபெறும் எனவும்,

முஸ்லிம்பாடசாலைகளுக்கு முதலாம் தவணை 2003 ஜனவரி 01ம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஏப்பிரல் 11ம் திகதி வெள்ளிக்கிழமைவரையும்,

இரண்டாம் தவணை 2003 ஏப்பிரல் 21ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி வெள்ளிக்கிழமை வரையும்

மூன்றாம் தவணை 2003 ஆகஸ்ட் 20ம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஒக்ரோபர் 23ம் திகதி வியாழக்கிழமை வரையும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# பனைவளம் பற்றிய விழிப்புணர்வை

# மக்கள் மத்தியில் ஏற்படுத்தவேண்டும்

## த. பொ. மே. நி. பொறுப்பாளர் தூயவன்

(கிளிநொச்சி)

முரண்பாடுகளின் மத்தியிலும் எமது தேசியம் கட்டி எழுப்பப்படவேண்டும். எமது தேசிய வளமான பனைவளம பேணப்பட்டு அவ் வளத்தை மேலும் பெருக்குவது தொடர்பாக மக்கள் மத்தியில் நாம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் தூயவன் தெரிவித்துள்ளார்.

பனை அபிவிருத்தி, பனம் விதை நடுகை தொடர்பாக நேற்று முன்தினம் வட்டக்கச்சியில் உள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலில் மேற்கண்டவாறு தூயவன் தெரிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டபனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர்கள் பனை, தென்னை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ். கணேசமூர்த்தி, எம். சின்னத்தம்பி ஆகியோரும் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் தூயவன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் பாதிப்புற்று ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களின் நலன்களுக்கு ஏற்றவகையில் திட்டங்கள வகுக்கப்பட வேண்டும்; குறிப்பிட்ட நலன்களை மட்டும் கருத்தில் கொள்ளாது நீண்ட காலப் போக்கில் திட்டங்கள் அமையவேண்டும் என்றும் ஒன்று கூடலில் கலந்து கொண்டவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

கலந்துரையாடலின் பின் 2002, 2003 ஆம் ஆண்டுக்கான பனைவள அபிவிருத்தி பனம் விதை நடுகை சம்பந்தமான திட்டம் தயாரிக்கப்பட்டது. (ம)

## யாழ். மாவட்டத்தில்

# 1.3 மில்லியன் டொலர் லிப்ட் திட்டம் அமுல்

(தென்மராட்சி)

அகில உலக கெயர் நிறுவனம் மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் 3 9 மில்லியன் கனேடிய டொலர் பெறுமதியான லிப்ட் (LIFT) திட்டத்தினை அமுல் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் 1 3 மில்லியன் கனேடிய டொலர் பெறுமதிமிக்க திட்டம் செயல்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-77)

## புலிகள் இயக்கத்தில்

# இணையச்சென்றசிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(மந்திகை)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணையும் நோக்கில் வடமராட்சி அரசியல்துறை கோட்டச் செயலகத்திற்குச் சென்ற மூன்று சிறுவர்களை கோட்டப்பொறுப்பாளர் தயா உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கரவெட்டிகிழக்கைச் சேர்ந்தவர்களான வே. சதன் (வயது –15), ர. ரவிசங்கர் (வயது-15), கரவெட்டி மேற்கைச் சேர்ந்த தி. திவ்வியா (வயது-15) ஆகியோரே இவ்வாறு பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டனர். (உ-23)

## பிரி. தூதரக அதிகாரிகள்

# பிறப்பு, இறப்பு பதிவுகள் யாழ். பணியகம் விஜயம்

(தென்மராட்சி)

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த மூன்று உயர் மட்ட அதிகாரிகள் நேற்றைய தினம் யாழ். அரச செயலகத்திலுள்ள பிறப்பு இறப்பு பதிவுகள் பணியகத்துக்கு விஜயம் செய்து மேலதிக பதிவாளர் நாயகம் என். சதாசிவஐயரைச் சந்தித்தனர்.

உயர்ஸ் தானிகராலயத்தைச் சேர்ந்தகரோலின் ஜே பௌத தலைமையில் வருகை தந்த குழுவினர் பிறப்பு சான்றிதழ்கள வழங்கப்படும் நடைமுறைகள் பற்றியும் அதில் கைக்கொள்ளப்படுகின்ற வழிமுறைகள் பற்றியும் மேலதிக பதிவாளர் நாயகத்திடம் விபரமாகக் கேட்டறிந்தனர். (உ-77)

## நெற் செய்கைக்கு ஏதுவாக

# மண் அணைகளைப் படையினர் அகற்றுகின்றனர்

(மந்திகை)

மந்திகைச் சந்திக்கு அண்மையில் உள்ள வயல் நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள மண் அணைகளை புல்டோசர்கள் கொண்டு படையினர் அகற்றி வருகின்றனர்.

மண் அணைகள் அமைக்கப் பட்டதன் காரணமாக மேற்படி பகுதி வயல் நிலங்கள் கடந்த காலங்களில் வீணே இருந்தன. இவ்வருடமாவது இப்பகுதியில் நெற் செய்கை பண்ண அனுமதிக்க வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைக்கு இணங்கவே இவ்வாறு மண் அணைகள் அகற்றப் பட்டு வருகின்றன. (உ-23)

## லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு

# ஜனாதிபதியின் சுட்டு விரல் பிரதமரை நோக்கி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கல்வி அமைச்சராக இருந்தபோது கொழும்பில் உள்ள பிரபல கல்லூரிகளில் ஒன்றான றோயல்கல்லூரியில் மாணவர்களை சேர்ப்பதற்காக சுமார் 25 ஆயிரம் ரூபாவை பெற்ற நபர் ஒருவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு ஒரு கொலைப் பணக்க வழங்கினார் என்றும் அதனை அவர் பெற்றுக் கொண்டதாகவும் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் மீது லஞ்ச ஊழல் குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்ற ஜனாதிபதி மிலேனிய புலமைப் பரிசில் வைபவத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு குற்றம் சுமத்தியுள்ளார். (ம)

பொ. ஐ. மு வின் முன்னெடுப்புக்களே

# சமாதானப் பேச்சு முன்னேற்றமடையகாரணம்

## பேராசிரியர் காமன் கிருவல

(கொழும்பு)

பேச்சுவார்த்தையின் மூலம் சமாதானம் எட்டப்படும் போது, போருக்கான முடிவு, போர் ஏற்படுவதற்கான காரணங்கள், போரினால் ஏற்பட்ட விளைவுகள் ஆகிய மூன்று விடயங்கள் முக்கியமாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப்பேராசிரியரும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் சிறுபான்மை விவகாரங்களுக்கான அமைச்சின் முன்னாள் செயலாளருமான காமன் கிருவல சமாதானம் தொடர்பான மாநாடு ஒன்றில் இவ்வாறு கருத்துக் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுக்கள் தற்போதைய கட்டத்தை எட்டிஇருப்பதற்குபொதுஜன ஐக்கிய முன்னணி முன்னர் தெரிவித்த யோசனைகளே காரணமாகும்.

விடுதலைப்புலிகளும் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான அரசாங்கமும் நீடித்த போர்நிறுத்தத்தையேவிரும்புகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ- 7,

## விடுதலையான படையினர்க்கு

# பதவி உயர்வு வழங்கப்படும் இராணுவத் தளபதி தகவல்

(கொழும்பு)

யுத்தக் கைதிகளாக இருந்து விடுவிக்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கு சேவைக்காலத்தைப் பொறுத்து பதவி உயர்வு வழங்குவது தொடர்பாக ஆராயப்படுமென இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்:

புலிகளின் பிடியில் யுத்தக் கைதிகளாக இருந்த காலப் பகுதியும் சேவைக்காலமாகக் கணிக்கப்பட்டு பதவி உயர்வு வழங்குவது தொடர்பாக அவர்கள் சார்ந்த படைபிரிவு மூலம் ஆராயப்பட்டு வருவதாகவும்.

அவர்களுக்குத் தொடர்ந்தும் சம்பளம் வழங்கப்பட்டு வருவதாகவும் பலகல்ல மேலும்தெரிவித்துள்ளார். (உ

## சம்பளப் பணத்தில் போலி நோட்டுகள்

# விமானப்படை அதிகாரிகள் மீது இரகசியப் பொலிசார் விசாரணை

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படை உத்தியோகத்தர்களின் இந்த மாதச் சம்பளப் பணத்தில் போலி நாணயத்தாள்கள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது சம்பந்தமாக விமானப்படை அதிகாரிகள் சிலரை விசாரணை செய்ய இரகசியப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்

நீர்கொழும்பு பொலிஸார் தலைமையலுவலகமும் இரகசியப் பொலிஸாரும் இணைந்து 5 விமானப்படை அதிகாரிகளை விசாரித்து வருவதாக நீர்கொழும்பு பொலிஸ் தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்டர் தம்மிக தயானந்தா தெரிவித்துள்ளார்.

தமது சம்பளப் பணத்தில் போலி நோட்டுக்கள் இருப்பதாக கூறிய உத்தியோகத்தர்கள் மீதே விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இதேவேளை விமானப்படை உத்தியோகத்தர்களுக்குரியசம்பளப் பணத்தை விமானப் படை அதிகாரியிடம் வழங்கிய வங்கி அதிகாரிகளும் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர் என்வும் தெரிவித்துள்ளார்

விமானப்படையைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தமது சம்பளப் பணத்தை பொத்துகர பிரதேசத்தில் உள்ள வங்கியொன்றில் வைப்புப் செய்யச் சென்றபோதே இந்த கள்ள நோட்டுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மூன்றரைக் கோடி ரூபா சம்பளப் பணத்தில் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான போலி நோட்டுகள் இதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## ராஜ்குமார் சுவாமி மந்திகை ஆஸ்பத்திரி விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ காயத்ரி காம கோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார், இன்று மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள வசதிகள் பற்றி ஆராய்வதுடன் நோயாளர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு ஆசீர்வாதமும் வழங்கவுள்ளார்.

இதேவேளை, சுவாமிகளுக்கு இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் முச்சக்கர வண்டி ஒன்றினை அன்பளிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## காவலாளி தாக்கப்பட்டார்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் தொழில் நுட்பநிறுவனத்தில் கடமையில் இருந்த காவலாளி கடந்த வியாழக்கிழமை

(2ஆம் பக்கம் பார்க்க)

# அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் 6ஆயிரம் ஹெக்டேயர் வயல் நிலம்

## விவசாயக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

தனங்கிளப்பு, மறவன் புலவு, அரியாலை கிழக்கு, மட்டுவில்பகுதி மற்றும் வடமராட்சி கிழக்குபோன்ற இடங்களில் உள்ள விவசாயிகள் தமது விவசாயநிலங்களில் காலபோக நெற்பயிர்ச்செய்கைக்கான முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள முடியாதநிலையில் இருக்கின்றனர்.

இந்தவகையில் அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள்என்ற போர்வையில் சுமார் 6 ஆயிரம் ஹெக்டேயர் நிலம் செய்கைபண்ண முடியாத நிலை காணப்படுவதாக நேற்றுமுன்தினம் யாழ். அரச செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக்குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கமநல, விவசாயத் திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் சமுகமளித்திருந்தனர்.

யாழ் மாவட்டத்தில் விவசாய மேம்பாட்டுத்திட்டங்களை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது திட்டங்கள்பற்றிய விபரங்களை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் சமர்ப்பித்து அதன் அங்கீகாரத்தைப் பெற்றபின்னரே தமது திட்டங்களை அமுல்செய்வது நல்லதுஎனத் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட விவசாயிகளுக்கு வேண்டிய விதைநெல், உரவகைகள், கிருமிநாசினிகள் போன்றவற்றினை எடுத்து வருவதுபற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 12 ஆயிரம் ஹெக்டேயர் நெற்பயிர்ச்செய்கை நிலம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

# ஆயுதப் பரிசோதகர்கள் ஈராக் நாட்டுக்குள் அனுமதி

(வியன்னா)

சர்வதேச ஆயுதப் பரிசோதகர் களை நாட்டிற்குள் அனுமதிப்பதற்கு ஈராக் சம்மதம் தெரிவத்ததையடுத்து ஐக்கிய நாடுகள் சபைப் பிரதிநிதி களும் ஈராக்கின் உயர் அதிகாரி களும் இணைந்து பேச்சுக்களை நடத்தியுள்ளார்கள்.

ஆஸ்திரேலியாவின் தலைநகர் வியன்னாவில் இந்தப் பேச்சுகள் குறித்து அணுவாயுதங்களை மறைத்து வைத்திருப்பதாகச் சந்தேகிக்கப் படும் இடங்களில் சர்வதேச ஆயுதப் பரிசோதகர் சென்று பார்வையிடுவது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

குறிப்பாக, ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹூசைனின் வாசஸ்தலத்திலும சோதனை மேற்கொள்வது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது.

இதற்கிடையில் ஈராக்கில் அமெரிக் காவும், பிரித்தானியாவும் கூட்டாக இணைந்து மேற்கொண்ட வான் தாக்குதல்களை ரஷ்யா கண்டித் திருக்கிறது.

இத்தகைய தாக்குதல்கள் ஈராக்கில் சர்வதேச ஆயுதப் பரிசோதகர்களை அனுமதிக்கும் விவகாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் ரஷ்யா கூறியுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா முன் வைக்க இருக்கும் தீர்மானத்திற்கு சீனா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளி டமிருந்து ஆதரவைப் பெறுவதற்கு அமெரிக்காவும், பிரித்தானியாவும் கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டு வரு கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (சு)

# உணவு விடுதி உரிமையாளருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது

(பீக்கிங்)

போட்டி வியாபாரத்தின் காரண மாக உணவு விடுதி ஒன்றில் விஷம் கலந்த மற்றொரு உணவு விடுதி உரி மையாளருக்கு சீன நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை வழங்கியுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் சீனாவில் அமைந்த உணவு விடுதி ஒன்றில் காலை உணவருந் தியவர்கள் 300க்கும் மேற்பட்டோர் மயக்கமடைந்து வீழ்ந்ததைத் தொடர்ந்து அவ் உணவு விடுதி மூடப்பட்டது.

அவர்களில் பாடசாலை மாணவர் கள் உட்பட 38பேர் வரை உயிரிழந திருப்பதுடன் ஏனையோர் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத் தப்பட்டிருந்த ார்கள்.

இந்தச் சம்பவம் குறித்த விசார ணையைப் பொலிஸார் மேற் கொண்டு வந்தபோதே உணவில் எலி விஷம் கலந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அது தொடர்பாக, தீவிர விசா ரணை மேற்கொண்ட பொலிஸார் போட்டி வியாபாரத்தின் காரணமாக பொறாமையால் மேற்படி உணவு விடுதியில் காலை உணவில் எலி விஷம் கலந்ததைக் கண்டுபிடித்து அவரைக் கைது செய்துள்ளார்கள்.

அவர் மீதான குற்றம் நிருபிக் கப்பட்ட நிலையில் சீன நீதிமன்றம் அவ ருக்கு மரண தண்டனை வழங்கித் தீர்ப பளித்துள்ளது. சீனாவில் உணவுகளில விஷம் கலக்கப்படும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (சு)

WORLD NEWS உலக தரிசனம்

# யுத்தச் செலவினம் பாதிப்பை ஏற்படுத்தும்

(வாஷிங்டன்)

ஈராக்கின் மீது அமெரிக்கா யுத்தம் செய்வதற்கு மாதாந்தம் 9பில்லியன் டொலர் செலவு ஏற்படும் என்று அமெரிக்க காங்கிரஸ் பகுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவ்வாறானதொரு யுத்தத் திற்கு தயாராகும் செலவு 20பில்லியன் டொலர்கள் வரை ஏற்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

அத்துடன் ஈராக்கிய ஜனாதிபதி சதாம்ஹூசைனை பதவி கவிழ்ப்பதுடன ஆயுதகளைவையும் மேற்கொள்ளத் தேவைப்பட்டால் பலாத்காரத்தை பிரயோ கிக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சின் கோரிக் கையை விவாதிக்க அமெரிக்க காங் கிரஸ் உறுப்பினர்கள் தயாரான நிலை யில், வரவு செலவுத்திட்ட அதிகாரி லிருந்துள்ள அறிக்கையிலேயே யுத்தச் செலவு பற்றிய விபரங்கள் தெரிவிக் கப்பட்டுள்ளன. (சு - 4)

## சேர்பிய தேர்தலில் குறைவானோரே வாக்களிப்பு

(பிரிட்டிஷ்)

சேர்பியாவில் நடைபெற்ற முதற் கட்ட வாக்களிப்பில் யூகோஸ்சிலா வாக்கியாவின் தற்போதைய ஜனா திபதி வோயிஸ்லா முன்னணியில் இருக்கிறார் என அறிவிக்கப்பட் டுள்ளது. இவருக்குப் போட்டியாக யூகோஸ்லாவியாவின் தற்போ தைய துணைப் பிரதமர் புரோகியா லாவோஷ் போட்டியிடுகிறார்.

அவர் இரண்டாவது இடத்தில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. முன் னாள் ஜனாதிபதியின் வீழ்ச்சிக்குப் பிறகு சேர்பியாவில் நடைபெறும் முதற் தேர்தல் இது என்பதும் குறிப் பிடத்தக்கது.

இந்தத் தேர்தலில் இதுவரை யில் வாக்களிப்புத்தொகை ஒப்பீட்டு ரீதியில் குறைவாக இருப்பதாகவும் இரண்டாம் கட்ட வாக்களிப்பிலும் வாக் களிப்புத் தொகை குறைவாக இருந் தால் இந்தத தேர்தல் செல்லுபடிய ற்றதாகும் என அவதானிகள் கூறுகின்றனர். (சு)

# பாகிஸ்தானின் ஜனநாயக ஆட்சிக்கு அமெரிக்கா ஒத்துழைக்க வேண்டும்

## பெனாஸீர் பூட்டோ கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தேர்தல் நடை முறையை வன்மையாகக் கணடித் துள்ள முன்னாள் பிரதமர் பெனாஸீர் பூட்டோ பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி மீள பெறுவதற்கு அமெரிக்கா முன்னின்று செயலாற்ற வேண்டும் என்று கேட்டுள்ளார்.

கடந்த மூன்று வருடகாலமாக வெளி நாட்டில் அஞ்ஞாத வாசம் செய்து வரும் பெனாஸீர்பூட்டோ பாகிஸ்தா னில் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தலில் போட்டியிடுவதை ஜனாதிபதி பர் வேஷ் முஷாரப் தடைசெய்ததுடன், பாகிஸ்தானுக்கு வந்தால் கைது செய்யப்படுவார் என்றும் அச்சுறு த்தப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் இராணுவ அரசு தான் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்க வேண்டுமென்றே சட்டங் களை இயற்றி உள்ளதாக அமெரிக் காவின் கொனஸ்ரிகல் பல்கலைக்கழ கத்தில் உரையாற்றிய போது கூறி யுள்ளார்.

அத்துடன் அமெரிக்காவின் பயங் கரவாதத்தின் மீதான யுத்தத்தில் முக் கிய இடத்தைப் பிடித்துள்ள நாட்டில் சுதந்திரமான தேர்தல் நடைபெற மாறு அமெரிக்கா வற்புறுத்த வேண்டுமெனவும் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சு)

## காஷ்மீர் தேர்தல் சமயத்தில்

# தீவிரவாதிகள் தாக்குதல் 9பேர் பலி, 10 பேர் காயம்

(புதுடில்லி)

காஷ்மீர் மாநிலத்தில் மூன்றாம் கட்ட வாக்குப் பதிவுகள் நேற்று நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை சுல்வாமா நகரில் இஸ்லாமிய தீவிர வாதிகள் நடத்திய தாக்குதலில் சுற றுலா பயணிகள் பஸ் ஒன்று வெடித்து சிதறியது.

இதில் பயணம் செய்த 9பேர் உயிரிழந்தனர். மேலும் 10 பேர் காயமடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இப் பேருந்தில் பயணம் செய்த வர்களில் அனேகமானோர் இந்துக் கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சமபவத்தை அடுத்து சம்பவ இடத்திற்கு மேலதிக இரா ணுவத்தினர் அனுப்பப்பட்டதுடன் படையினர் தீவிர ரோந்து நடவடிக் கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தலை குழப்புவதற்கு தீவிர வாதிகள் மேற்கொண்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி தாக்குதல் சமபவத்திற்கு எந்த தீவிரவாத அமைப்பும் உரிமை கோரவில்லை என்றும் இந்தியா தெரி வித்துள்ளது. (த-5)

# எண்ணெய்க் கப்பல் கொள்ளையடிப்பு

(கோலாலம்பூர்)

மலாக்கா நீரிணையில் கடல் கொள ளையர்கள் மலேசிய எண்ணெய் கப்பல் ஒன்றை கொள்ளையடித்துள ளார்கள்.

அக்கப்பலில் 6 இலட்சம் பெறுமதி யான டீசல் இருந்தது என்றும்,

கொள்ளையர்கள் அதில் இருந்த மாலுமிகளைக் கட்டிப் போட்டு விட் டுத் தாம் கொண்டு வந்த கப்பலினுள் டீசலை ஏற்றிச்சென்று விட்டதாகவும செய்திகள் தெரிவிக்கின்றன. (சு-4)

# பலஸ்தீனத்தில் தேர்தல் ஐரோப்பிய யூனியன் அறிவிப்பு

(பெர்லின்)

பலஸ்தீனத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் தேர்தல் நடைபெற வுள்ளதாக ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது.

அத்துடன் பலஸ்தீனத் தேர் தலை நடத்துவதற்கான ஆயத்தங்க ளுக்கு இடமளிப்பதற்காக பலஸ்தீன பிராந்தியங்களில் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டங்களை நீக்கு மாறும், கட்டுப்பாடுகளை தளர்த்து மாறும் ஐரோப்பிய யூனியன் இஸ் ரேலை வலியுறுத்தியுள்ளதுடன்,

பயங்கரவாதத்தின் சகல வடிவங்களுக்கும் ஒரு முடிவு கட்டும் நோக்கில் பாதுகாப்புத் துறை உட்பட சகல துறைகளிலும் மறுசீரமைப்புக்களை அறிமுகப் படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் வெளி விவ கார அமைச்சர்கள் பலஸ்தீனத்தை கேட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (சு)

# இரு விமானங்கள் மோதியதில் 15பேர் பலி; 15பேர் காயம்

(புதுடில்லி)

கோவாநகர் பானாரஜிக்கு அருகில் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த இரண்டு விமானங்கள் நேற்று நடுவானில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

அவற்றில் சென்ற 15பேர் உயி ரிழந்தனர். மேலும் 15 பேர் காயம டைந்தனர். அந்த விமானங்கள் இரண்டும் தரையில் கட்டுமானப் பணி நடைபெற் றுக்கொண்டிருந்த வீடு ஒன்றின் மீது வீழ்ந்ததால் தொழிலாளர்கள் சிலரும் இறந் திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

காலை 10மணிக்கு இவ்விபத்து ஏற்பட்டது என்றும் சம்பவ இடத்திலி ருந்து நேற்று 3 சடலங்கள் மீட்கப் பட்டதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். விமான அணி ஒன்றினது வெள்ளி விழாக் கொண் டாட்டங்களை ஒட்டி விமானங்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே இவ அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. (சு)

# இஸ்ரேல் - பலஸ்தீன மோதலால் சிறுவர்கள் பெருமளவில் பாதிப்பு

## சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் - பலஸ்தீனத் தரப்பால மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்கு தல்களில் சிறுவர்கள் இலக்கானது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் வெளியிட்டுள்ளது. இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகளால் சிறுவர்கள் பாதிக கப்படுவது அதிகரித்து வருவதா கவும் இச்சபை நேற்று வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவித் துள்ளது.

மேலும் கடந்த இரு வருடங்க ளாக இடம்பெற்று வரும் இரு தரப் பினருக்கும் இடையிலான மோதல் களில் இதுவரை 18 வயதுக்குட் பட்ட 250 க்கும் மேற்பட்ட பலஸ்தீன சிறுவர்களும் 70க்கும் மேற்பட்ட இஸ் ரேலியச் சிறுவர்களும் கொல்லப்பட் டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை தன் அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன் சிறுவர்களதும் பொது மக்களதும் உயிர்கள் குறித்து இஸ்ரே லியப் படையினரும் பலஸ்தீன தீவிரவாத அமைப்புக்களும் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும் இச் சபை மேலும் வேண்டுகோள் விடுத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சர்வதேச கண்கா ணிப்பாளர்களைப் போர்ப் பிராந்தி யத்துக்கு அனுப்பவது சிறுவர்களதும் பொது மக்களதும் உயிர்களை காப் பாற்ற வழிவகுக்கலாமென சர்வதேச மன்னிப்புச் சபை ஆலோசனை தெரி வித்துள்ளது. (சு)

# இயற்கை உரத்தின் சிறப்பு கண்டுபிடிப்பு விளைச்சலில் புதிய சாதனை

(புதுடில்லி)

விவசாய எச்சங்களையும், விலங்கின கழிவுகளையும் ஒன்றாக்கி தொன்று தொட்டு உருவாக்கப்பட்டு வரும் “இயற் கை உரமே” நல்ல விளைச்சலை ஈட்டித் தருகின்றது என்பது ஒரு ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

குஜராத்தின் கமபட்குடா பகுதி யில் உள்ள வறட்சியான பல கிரா மங்களில் இந்த ஆய்வு மேற்கொள் ளப்பட்டது. இன்ஸ்டிட்யூட் ஆப் ஸ்டெடீஸ அன்ட் டிரான்ஸ்பர்மேஷன எனும் ஆராய்ச்சிப் பயிலகம் கடந்த மூன்று ஆண்டுகளாக இப்பகுதியிலுள்ள விவசாயிகளுடன் இணைந்து இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டது.

உயிரினச் சார்பு உயிரி உரம் - அதாவது ‘புரோபயாட்டிக் ஆர்கனிக் உரம்’ என்று அழைக்கப்படும் நமது பழைய இயற்கை உரத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்து பார்த்துள்ளனர்.

இந்த உரத்தை உபயோகப்படுத [illegible]தில் அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், பருத்தி, சீரகம் ஆகியவற் றின் உற்பத்தி அதிகமாக கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப் பட்டது, எந்த ஒரு தனித்த ஆராய்ச்சி மையத்திலும் அல்ல. விவசாயிகளு டன இணைந்து அவர்களின் நிலங் களிலேயே இந்த ஆராய்ச்சி நடத் தப்பட்டது.

ஆராய்ச்சி நடத்தப்பட்ட இடமான குஜராத்தின் கம்பட் வளைகுடாப் பகுதி, மிகுந்த வறட்சியான பகுதி யாகும். ஒரு சராசரி வறட்சிப் பகுதி யிலேயே இந்த அளவிற்கு உற்பத்தி கிடைப்பதில் இருந்து நீர்ப்பாசன வசதி உள்ள இடத்திலும், வறட்சியான வானம் பார்த்த பூமியானாலும் இயற்கை உரமே சிறந்த விளைச் சலைத் தரும் என்பது இந்த ஆய் வின் மூலம் உறுதியாகி உள்ளது.

விளைச்சல் மட்டுமின்றி இயற்கை உரத்தைப் பயன்படுதிப் பெறும் உணவு தானியங்களை உட்கொள்வதால் தற்போது நம்மி டையே பொதுவாக நிலவிவரும் சர்க்கரை வியாதி, மூச்சிரைப்பு, இருதய நோய், மூட்டுவலி, சிறுநீரகக் கோளாறு, கீல் வாதம ஆகிய நோய்கள் வருவதில்லை என்பதும் இந்த ஆய்வின் மூலம் கண்டறியப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பருவமழை பெருமளவு பொய்த்துவிட்ட காரணத் தினால், குஜராத்திலும் கடும் வறட்சி நிலவுகிறது. இவ்வறட்சியின் காரணமாக விவசாயம் பெரும் பாதிப்புக்குள்ளானது மட்டுமன்றி, கால் நடைகளுக்கு இயற்கையாகக் கிடைக்கும் புற்களுக்கும் கூட பஞ்சம் மேற்பட்டுவிட்டது. இயற்கை உரத் தையும், நிலத்தின் தன்மையை யும் முழுவதுமாக புறக்கணித்த தாலும் பல ஆண்டுகளாக செயற் கை உரங்களையும், இரசாயன இடு பொருட்களையும் பயன்படுத்தி யதே இந்த கடும் வறட்சிக்குக் கார ணம் என்று அந்த ஆராய்ச்சி நிறுவ னம் கூறியுள்ளது. (சு)



குவஹாட்தியில் நடை பெற்ற வடமேற்கு இந்திய அழகி-2002 போட்டியில் முதல் இடத்தைப் பிடித்த விஜேதா அகோவுனோ (நடுவில்) உடன் இரண்டாம் ,மூன்றாம் இடங்களைப் பெற்ற மோனி தட்தா மற்றும் மிஸ் ப்ளோரென் ஸ்ஹொமேட்.

# இன்று ஒரு தகவல்

## மரமும் மனிதனும் சரியா?

ஒரு ராஜா தன் பரிவாரங்களோடு ஒரு காட்டுவழியாகப் போய்க்கொண்டிருந்தார். பக்கத்தில் அமைச்சர் போகிறார் அதற்குப் பக்கத்தில் அரண்மனை சேவகர்கள் போகிறார்கள். திடீரென்று எங்கேயிருந்தோ ஒரு கல் விர் என்றுவந்தது நேராக ராஜாவின் நெற்றியில்வந்துபட்டது. அவர் நெற்றியைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார். பக்கத்தில் இருந்தவர்கள் பதறிப்போனார்கள். ராஜா மேலே ஒருகல் பட்டுவிட்டதுஎன்றால் சும்மாவா? எங்கேயிருந்து அந்தக்கல் வந்திருக்குமென்று தேடிக்கொண்டு எல்லோரும் நாலா பக்கமும் ஓடினார்கள்.

அங்குஒரு சின்னப்பையன் நின்றுகொண்டிருந்தான். அவன்கையில் ஒரு கல்லைவைத்துக் கொண்டிருந்தான். அமைச்சர் கோபமாக 'இங்கேஎன்ன பண்ணிக்கொண்டிருக்கிறாய்?' என்றுகேட்டார். அவன் பயந்துபோய்விட்டான் மெதுவாக வாயைத்திறந்து 'மாங்காய் அடித்துக்கொண்டிருக்கிறேன்' என்றான். பக்கத்தில் பார்த்தார். ஒரு பெரிய மாமரம் கீழே இரண்டு மாங்காய்கள் கிடந்தன அவர் புரிந்துகொண்டார். பையன் மாங்காய் அடிப்பதற்காக வீசின கல்தான் மன்னர் நெற்றியில் பட்டிருக்கிறது

இருந்தாலும் அவனைச் சும்மா விடமுடியுமா? பிடித்து இழுத்துக்கொண்டுவந்து ராஜாவுக்கு முன்னால் நிறுத்தினார். ''மன்னா! இவன்தான் கல்வீசினவன் இவனைச் சும்மா விடக்கூடாது. தண்டனை கொடுக்கவேண்டும்' என்றார்கள் ராஜா யோசித்தார் விசாரிக்காமல் தண்டனை கொடுப்பது தவறு! நாளைக்கு அரண்மனையில் விசாரணை பண்ணலாம்!' என்றுசொல்லி விட்டுப் போய்விட்டார் மறுநாள் அரண்மனையின் உள்ளே விசாரணை மண்டபத்தில் எல்லோரும் கூடியிருக்கிறார்கள் அந்தச் சின்னப் பையனைக்கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள்: ராஜா விசாரிக்கிறார்.

''ஏனப்பா... நீ அந்தக் காட்டில் என்ன செய்து கொண்டிருந்தாய்?'' என்று கேட்கிறார். ''மாங்காய் அடித்துக்கொண்டிருந்தேன்'' என்கிறான் பையன். எத்தனை மாங்காய்கள் கிடைத்தன''? என்கிறார். ''இரண்டு'' என்கிறான். ''நீ வீசின கல் மரத்தில் பட்டால் அதற்கு வலிக்குமென்று உனக்குத் தெரியுமா?'' என்கிறார். ''தெரியாது'' என்கிறான்: நீ வீசின கல் மனிதர் மீது படும் என்பது உனக்குத் தெரியுமா'' என்கிறார். ''தெரியாது'' என்கிறான் ராஜா கொஞ்ச நேரம் யோசிக்கிறார் அதன் பின்னர் தீர்ப்புச் சொல்கிறார் அந்தச் சின்னப் பையனைப் பார்த்து!

'உனக்குத் தண்டனை கிடையாது உன்னை விடுதலை செய்கிறேன்! போய் விட்டு வா!'' என்று சொல்லி விட்டார் அரண்மனையில் இருந்த எல்லோருக்கும் ஆச்சரியம். ''என்ன இது... ராஜா இப்படிப் பண்ணி விட்டாரே''? என்று இருந்தாலும் ராஜா தீர்ப்புச் சொன்னால் சொன்னது தான். எல்லோரும் கலைந்து போய் விட்டார்கள். கடைசியாக அமைச்சர் மட்டும் அங்கே நின்று கொண்டிருந்தார். என்ன அமைச்சரே! என்ன யோசனை? என்றார் மன்னர். அமைச்சர் மெதுவாக... ''ம் ஒன்றுமில்லை. இந்தத் தீர்ப்பு-'' என்று இழுத்தார்.

ராஜா சிரித்துக்கொண்டே சொன்னார் ''அமைச்சரே! மரத்துக்கு அறிவு குறைவு. மனிதனுக்கு ஆறு அறிவு என்று சொல்கிறார்கள் ஒரு மரத்தின் மீதுகல் எறிந்த சிறுவனுக்கு இரண்டு மாங்காயைப் பரிசாகக் கொடுத்திருக்கிறது! ஒரு மனிதன் தன் மேல் கல் எறிந்த ஒரு சிறுவனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களே. இது சரியா என்று?'' கேட்டு இருக்கிறார் ராஜா, அமைச்சர் தலை குனிந்தாராம். அறியாமல் செய்கிற குற்றத்தை மன்னிக்கிற மனோபாவம் மனிதனுக்கு வேண்டும்? என்பதை வலியுறுத்துவதற்காக இந்தக் கதை.

''இந்தக் காலத்தில் அப்படிப்பட்ட மனோபாவம் யாருக்குமே இல்லை சார்!'' என்றான் ஒருசின்னப்பையன் ''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டேன் ''நான்கூட ஒரு மாமரத்தில் கல் எறிந்தேன் சார். அது இரண்டுமாங்காய்களைக் கொடுத்தது. அதற்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒருமனிதன்மேல் அந்தக்கல் படவே இல்லை. இருந்தாலும் அவன்தண்டனை கொடுத்துவிட்டான் சார்!'' என்றான். என்ன கண்டனை? என்றேன். 'இரண்டு அறை!' என்றான் 'ஏன்டா அப்படி?' என்று கேட்டேன். 'அந்த மரம் அவனுக்குச்சொந்தமாம் சார்! அது எப்படி எனக்குத் தெரியும்?' என்கிறான் அந்தப் பையன்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஜே.வி.பியின் யோசனை அமுல் செய்யப்பட வில்லை

### விமல் வீரவன்ச சுட்டிககாட்டு

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தின் தனியார் மயமாக்கல் திட்டத்திற்கு எதிராக மேற்சொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியபேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தான் தெரிவித்த யோசனைகள் எவையும் இதுவரை அமுல்செய்யப்படாதது ஏன் எனமக்கள்விடுதலைமுன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வியையெழுப்பியுள்ளார்

இத்தனியார் மயமாக்கல் திட்டத்தை எதிர்த்து கடந்த ஜூலைமாதம் 8ம்திகதி கட்சித்தலைவர்கள் மற்றும் அனைத்து எதிர்ப்பு அமைப்புக்களின் தலைவர்களின் ஆலோசனைகளுடன் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கூட்டமொன்றை கூட்டுமாறு கேட்டிருந்தார்,

இந்தக்கூட்டம் கூட்டப்படாததால் அரசாங்கத்தின் தனியார் மயமாக்கல் திட்டத்துக்கு எதிராக ஒருபொதுவான எதிர்ப்பணியை உருவாக்க முடியாது இருக்கிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது யோசனை அமுல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷவை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கிடையில் இதற்குஎதிராக அனைத்துஎதிர்கட்சிகளும் இணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த திட்டமிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

(உ-4)

## பாராளுமன்றம் - ஜனாதிபதி இடையே நிலவும் முரண்பாடுகள் நாட்டின் பொருளாதாரத்திற்குத் தீங்கு

### இலங்கை மத்திய வங்கி பிரதித் தலைவர்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படுவதற்கான சமிக்ஞைகள் தென்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் பிரதித்தலைவர் டபிள்யூ ஏ விஜயவர்த்தனநேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் நடுப்பகுதியில் உத்தேச தேசிய உற்பத்தி 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளது சென்றவருடத்துடன் ஒப்பிடும்போது இது பெரும்முன்னேற்றமாகும்.

இவ்வருடத்தில் 3 சதவீத பொருளாதார முன்னேற்றத்தை மத்தியவங்கி எதிர்பார்ப்பதாகவும், தற்போது நாட்டில் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானம் வெற்றி பெறுமானால், அது நாட்டின் பொருளாதாரத்தை மேலும் முன்னேற்றுவதற்கு உதவும் எனவும் தெரிவித்துள்ளார்

எவ்வாறாயினும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறைக்கும், பாராளுமன்றத்துக்கும் இடையே நிலவும் முரண்பாடுகள் நாட்டின் பொருளாதார நிலைமைக்கு தீங்காக அமைகிறது.

இந்த நிலைமை மேலும் நீடிக்குமானால், இது பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்காது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்

(உ-8)

## ஜப்பான் நாட்டு உதவி யாழ். பல்கலைக்கு கிட்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு உதவி வழங்கும் நோக்கில் நாளை ஜப்பானியத் தூதுக்குழுவொன்று யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

இத் தூதுக்குழுவினர் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் பீடாதிபதிகள், துறைத் தலைவர்களையும் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

(ம)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில், இவ்வாரம் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதனின் 'சைவ வாழ்வில் பண்புகள்' எனும் விடயத்தில சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.

இதேவேளை இம்மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிப 4.00 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் பண்ணிசை வகுப்பு ஆரம்பித்து தொடர்ந்து வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறவுள்ளது.

தேவார இசைமணி இரா. திருஞானசம்பந்தனால் நடத்தப்படும் இவ்வகுப்பில் தொடர்ந்து பங்கு பற்றும் மாணவர்களுக்கு வருடமுடிவில் அமைச்சினால் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

(உ)

## வர்த்தகர்கள் பிணையில் விடுவிப்பு

(மந்திகை)

சுகாதார முறைகளை அனுசரியாது தேநீர்சாலைகளை நடத்திய வர்த்தகர்கள் நால்வரை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் பிணையில் விடுவித்தது.

உரிய சுகாதார ஆலோசனைகளை கைக்கொள்ளாத வர்த்தக உரிமையாளர்களுக்கு எதிராக பருத்தித்துறை சுகாதார பரிசோதகர்களினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நடைபெற்றபோது நீதிமன்றிற்கு ஆஜரான வர்த்தகர்கள் நான்கு பேரையும் வர்த்தக நிலையங்களை உடனடியாக புனரமைப்பு செய்து நீதிமன்றில் அறிக்கையை ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி கலா ஆயிரம் ரூபா பெறுமதியான சரீர பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

(உ-23)

## சித்திரவதை நடைமுறையை உடன் நிறுத்த வேண்டும்

### ஆசிய சட்டவள நிலையம்

(கொழும்பு)

இலங்கையில் சித்திரவதை நடைமுறைகள் பரவலாக உள்ளமையை உடன் நிறுத்த அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு ஆசிய சட்டவள நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆசிய மனிதஉரிமை ஆணைக்குழுவின் இணை அமைப்பான ஆசிய சட்டவள நிலையத்தினால் இலங்கையின் சித்திரவதை நடைமுறைகள் குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய சட்டவள நிலையம் கடந்த நான்கு ஐந்து மாதங்களில் இடம்பெற்ற 30ற்கும் மேற்பட்ட சித்திரவதை சம்பவங்களையும் சுட்டிக்காட்டியுள்ளது.

சாதாரண குற்றச்சம்பவங்கள் தொடர்பான குற்ற விசாரணைகளிலும் சித்திரவதை நடைமுறையில் உள்ளது. இதன் காரணமாக இலங்கையின் குற்றவியல் நீதிநடைமுறைக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## சிறுவர் - முதியோர் தின ஆக்கப் போட்டி முடிவுகள்

(உடுவில்)

சிறுவர், முதியோர் தினங்களையொட்டி வலி-வடக்கு தெல்லிப்பளைப் பிரதேசசெயலகத்தினால் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளின்முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

### சிறுவர் தினம் கட்டுரைப்போட்டி

(மேற்பிரிவு)

க. சிந்துஜா-மயிலிட்டி றோ.க.த.க.பாடசாலை, சி. ஜனிதா-அளவெட்டி அருணாசலம் வித்தி த. கஜனி யூனியன் கல்லூரி, ச. அனுசரி-வசாவிளான் ம.ம. வித்தி.

(கீழ்ப்பிரிவு)

வா. தாபிஷா-யூனியன் கல்லூரி, செ. கௌரி-மல்லாகம் ம.வி. த. டிசாந்தி-அளவெட்டி அருணோதயா வித்தி. ச. சாளினி-வசாவிளான் ம.ம. வி.

### கவிதைப் போட்டி

மேற்பிரிவு

ஸ்ரீ. வாமினி- யூனியன் கல்லூரி, இ. கிருஷாந்தி- வசாவிளான் ம.ம. வித்தி.

கீழ்ப்பிரிவு

ஞா. பிருந்தா- மகாஜனக் கல்லூரி, த. பவித்திரா- யூனியன் கல்லூரி, த. மௌலி- அளவெட்டி அருணோதயா வித்தி.

### முதியோர் தினம் கட்டுரைப் போட்டி

மேற்பிரிவு

சோ. சோபியா வசாவிளான் ம.ம. வித்தி, யோ. காயத்திரி யூனியன் கல்லூரி.

கீழ்ப்பிரிவு

இ. ஜெயந்தினி- யூனியன் கல்லூரி, ஜ. தர்சினி- வசாவிளான் ம.ம. வித்தி

### கவிதைப் போட்டி

மேற்பிரிவு

அ. மதுரா- வசாவிளான் ம.ம. வித்தி, ஸ்ரீ. வாமினி- யூனியன் கல்லூரி.

கீழ்ப்பிரிவு

து. சுவித்திபா-வசாவிளான் ம.ம. வித்தி. (உ-261)

## பல்கலை புகுமுக மாணவர் ஒன்றிய அலுவலகம் திறப்பு

(கிளிநொச்சி)

அக்கராயனில் இயங்கிவந்த கிளிநொச்சி மாவட்ட, பல்கலைக்கழகங்களிற்கான புகுமுக மாணவர் ஒன்றிய அலுவலகம் நேற்று முன்தினம் தொடக்கம் கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது

நேற்று முன்தினம் புகுமுக மாணவர் ஒன்றியத் தலைவர் கோகுலரூபனின் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ராணிமைந்தன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

அதைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நாடாளவை வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

(உ-10)

சிறுவர் தினமான நேற்று முதல்

# சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான விசேட பொலிஸ் பிரிவு இயங்குகிறது

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகம்சிறுவர்களுக்கெதிரான சகலவித துன்புறுத்தல்களையும் கட்டுப்படுத்துவதற்கான விசேட பொலிஸ் பிரிவு ஒன்று சர்வதேச சிறுவர் தினமான நேற்றிலிருந்து செயற்படத் தொடங்கியுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமைச் செயலகத்தில் செயற்படும் இப்பிரிவில் சிறுவர் துஷ்பிரயோகத்தில் மிகுந்த தேர்ச்சி பெற்ற அதிகாரிகள் பணியாற்றுவதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கிவருகிறது விசேட பொலிஸ் பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஸ்ரீசேன ஹெரத்தின் பொறுப்பில் இயங்குகிறது.

நேற்று மாலை வைபவரீதியாக உள்துறை அமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனை குறிக்கும் வகையில் நேற்று முன்தினம் அஞ்சல் உறையும் முத்திரையும் வெளியிடப்பட்டது.

இதேவேளை, கடந்த ஆண்டு ஆயிரத்து 200 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டதாக சபையின்தலைவர் பேராசிரியர் ஹரேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (உ)

## இணைப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது (உ-19)

## புதிய அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாலய அதிபராக அ. சிவபாதசுந்தரம் அண்மையில் பொறுப்பேற்றார். (உ-19)

## நிரந்தர அதிபர்களாக நியமனம் பெற்றவர்களுக்கு உரிய சம்பளம் இல்லை

(கோப்பாய்)

நீண்ட காலமாக பதில் அதிபர்களாகக் கடமையாற்றி நிரந்தர அதிபர்களாக நியமனம் பெற்றவர்களுக்குஉரிய சம்பளத்தை வழங்குவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் யாழ் மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களில் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை, என சம்பந்தப்பட்ட அதிபர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

கல்வி அமைச்சு, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் 4.8 2000 தொடக்கம் செயற்படும் படியான அறிவுறுத்தலிற்கு அமைவாக இலங்கையில ஏனைய மாவட்டங்களில் உள்ள கல்வி வலயத்திணைக்களங்கள் உரிய சம்பளத்தை வழங்கியுள்ளன.

ஆயினும், யாழ் மாவட்டத்தில் இதுவரை உரிய சம்பளம் வழங்கப்படவில்லை, இவ் விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஆசிரியர் சங்கத்தினர் அக்கறை செலுத்தாதுள்ளமை குறித்து அதிபர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-79)

## மக்கள் வங்கியை தனித்தனியான மூன்று பிரிவுகளாக இயக்கயோசனை

(கொழும்பு)

மக்கள் வங்கிமூன்று தனித்தனியான பிரிவுகளாக பிரிக்கப்படவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வர்த்தக வங்கி, சேமிப்பு பிரிவு, கொடுத்த கடன்களை மீளப்பெறும் கடன் மீட்புப் பிரிவு என்பவை அம்மூன்று பிரிவுகளுமாகும்.

உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் தொழில் நுட்ப உதவிக் கூட்டுக் குழுவுடன் மக்கள் வங்கி அதிகாரிகளும் அரசின் நிதித்துறை அதிகாரிகளும் அண்மையில் நடத்திய பேச்சுக்களின் போது மேற்படி யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மக்கள் வங்கியை ஒரு அரச கம்பனியாக மாற்றியபின் அதனை மூன்று பிரிவுகளாக பிரித்து விடுவதென்றும், காலக்கிரமத்தில் வர்த்தக வங்கிப் பிரிவை மட்டும் தனியார் மயமாக்கிவிடுவதென்றும் அரச அதிகாரிகள் தீர்மானித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

மக்கள்வங்கிமீள்கட்டமைப்புக்கான நிதி 2003 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளது.

2001 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியின் ஒதுக்கம் எதிர்மறை 7 2 பில்லியன் ரூபாக்களாகும் 2000 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் 115 பில்லியன் ரூபா 2001 ஆம் ஆண்டில் 127.5 பில்லியன் ரூபாவாகும். (உ)

## காணாமல் போன படையினரின் உறவினர் சங்கம் புலிகளுக்குப் பாராட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் வசம் போர்க்கைதிகளாக விருந்த 7 படையினரை அண்மையில்விடுவித்திருந்தமை குறித்து போர் நடவடிக்கையின்போதுகாணாமல்போன படைவீரர்களின் உறவினர் சங்கம் புலிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளது.

போர் நடவடிக்கைகளின் போது காணாமல் போன சங்கத்தின் தலைவர் ஈ.பி. நாணயக்கார மேற்படி படையினர் விடுதலை குறித்து கருத்துதெரிவிக்கையில்,

சமாதானமுயற்சிகளின் ஒரு முக்கிய நிகழ்வாகவே அரசு-புலிகள் கைதிகள் பரிமாற்றம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

எனவே மேலும் சமாதான நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டுமானால் இரு தரப்பினர்களுக்கு இடையில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளால்மேலும் படைவீரர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்களை விடுதலை செய்யக்கோருமகஜர் ஒன்றைவிடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிப்பதற்குதமது சங்கம் எண்ணியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## இலக்கியத்துறை வளர்ச்சியில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

வாசிப்புப் பழக்கம் குறைவடைந்துள்ளமை

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவலை

(கொழும்பு)

இலங்கையில் வாசிப்பு பழக்கம் குறைந்துள்ளதன் காரணமாகவே, இலக்கியத்துறையின் வளர்ச்சி குன்றியிருப்பதாக பிரதமர்ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டுமண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரச சாகித்திய விருது வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; ஏனைய நாடுகளில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களும் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதனாலேயே அந்நாடுகளில் இலக்கியம் மிகவும் வளர்ச்சியடைந்திருக்கிறது என்றார்.

சர்வதேச இலக்கியப் படைப்புகள் நாட்டில் ஆயிரக்கணக்கில் விற்பனையகி வருகின்றன, ஆனால், இலங்கை படைப்புக்கள் நூற்றுக்கணக்கிலேயே விற்பனையாகி வருகின்றன எனவும் கவலை தெரிவித்துள்ளார்.

சர்வதேச மொழியான ஆங்கிலமொழியை அடிப்படையாக வைத்தே தமிழ், சிங்கள மொழிகளை பாதுகாக்க முடிவதாக கூறிய பிரதமர், அம் மொழியை கற்பதன் மூலம் இலக்கிய இரசனையை அதிகரிக்க செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளார் (உ-8

## நில அளவைச் சட்டம் திருத்தி அமைக்கப்படும்

(கொழும்பு)

நிலஅளவைச்சட்டம் அடுத்த ஆண்டளவில் திருத்தி அமைக்கப்படும் என நில அமைச்சர் கலாநிதி ராஜிதசேனாரட்ண தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள அரசாங்க நில அளவையாளர் சங்கத்தின் 80 வது வருடாந்தமாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

19 ஆம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இச் சட்டத்தை திருத்தி அமைப்பதன் மூலம் நில அளவையாளர்களின் தொழில் துறைசார் மதிப்பை பாதுகாப்பதோடு, அதன்வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என அமைச்சர்நம்பிக்கை தெரிவித்துள்ளார்

நில அளவையாளர்கள் தனியார் துறையினுள் புகுந்து கொள்வதற்கும் இத்திருத்த சட்ட மூலம் இடமளிக்கிறது (உ-8)

## வைத்தியசாலையின் நீரை விரயம் செய்ய வேண்டாம்

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் மின்சாரம், குடிநீர் என்பவற்றை விரயம் செய்யாது தேவைக்கு மாத்திரம் பயன்படுத்துமாறு மாவட்ட வைத்திய அதிகாரி சி சந்திரவேற்பிள்ளை தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களைக் கேட்டுள்ளார்

வைத்தியசாலையில் தங்கியிருக்கும் நோயாளர்களின் பாவனைக்காக விடுதிகள் தோறும் பொருத்தப்பட்டுள்ள குழாய்களில் நீரினைப் பெறுவோர், தமது பயன்பாடு முடிந்ததும் அப்படியே விட்டுச் செல்கின்றனர். இதனால குடிநீர் தேவையற்ற முறையில் விரயமாகின்றது.

அதே போல் மின்குமிழ்கள், காற்றாடிகள் நோயாளர்கள் இல்லாத வேளைகளிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இதனால், குடிநீர், மின்சாரம் என்பன விரயமாகின்றன என்றும் வைத்திய அதிகாரி சுட்டிக் காட்டியுள்ளார். (உ-23)

## பரிசுத் தினம்

(கோப்பாய்)

அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி பரிசுத்தின விழா இன்று காலை 9 00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் அருட்சகோதரி எம்:றொசாறியோ தலைமையில் நடைபெறவுள்ளது

நிகழ்வில் முதன்மை விருந்தினராக இந்து கலாசார விவகார அமைச்சர் தி மகேஸ்வரனும் கௌரவ விருந்தினர்களாக அச்சுவேலி மக்கள் வங்கிமுகாமையாளர் கே. சுலோசலிங்கம், கோப்பாய் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-79)

## நீதித்துறைப் பிரிவு பிரதேச எல்லைகள் மீள் நிர்ணயம்

(கொழும்பு)

நாட்டின் நீதித்துறைப் பிரிவில், அதன் பிரிவுப் பிரதேசங்களின் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வதற்கான திட்டமொன்று அமைக்கப்பட்டு வருவதாக நீதி சட்டச்சீரமைப்பு இன ஒருமைப்பாட்டு புத்தசாசன அமைச்சர் வி ஜே.மு லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

நீதித்துறைப் பிரிவு பிரதேசங்கள் சம்பந்தமாகவும், பொலிஸ் பிரிவுகள் நீதித்துறைப் பிரிவுகள் என்பனவற்றுக்கிடையிலான முரண்பாடுகள் தொடர்பாகவும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாகவே நீதித்துறையின் கீழ் உள்ள பிரிவுப்பிரதேசங்களின் எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்படவுள்ளன.

இப்பிரதேசங்களை மீள்நிர்ணயம் செய்வதன் மூலம் தற்போதுள்ள பிரிவுகளில்மாற்றங்கள் ஏற்படும் இது தொடர்பான நடவடிக்கைகள் யாவும் அடுத்த இரண்டாண்டினுள் பூர்த்தியடையும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## படையினர் கைதுபற்றி உறவினர் முறைப்பாடு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் திருகோணமலை வில்கம் விகாரைப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்ட இராணுவத்தினரின் உறவினர்கள் இதுகுறித்து திருகோணமலை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு மற்றும் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட மேற்படி 7 இராணுவத்தினரையும் விடுதலை செய்யக்கோரி நேற்று முன்தினம்அவர்களின் உறவினர்கள் புலிகளின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்துள்ளதும் தெரிந்ததே. (உ-8)

# சிறுவர் உரிமைகள் குறித்த குரல்கள் ஒலிப்பது அவர்களின் எதிர்காலம் சிறக்க வழிவகுக்கும்

இவ்வாரம் உலகெங்கும் கொண்டாடப்படும் சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது. (ஆ-ர்)



உலக[illegible]ில் இன்று சாதாரண[illegible] சிறுவர்களுக்கான [illegible]ல் ஓங்கி ஒலிக்கத் தொ[illegible]யுள்ள இவ் வேலையில், [illegible] யுத்தத்தின் கொடுமைகளா[illegible]ள நெருக்கீடு, மனவடு (Trauma) மற்றும் எண்ணிலடங்கா துஷ்பிரயோகங்களுள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் நமது சிறாரைப் பற்றியும் சிந்தனை செய்ய வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சமவாயம் (UN convention on the right of the child) 1989 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1991 ஆம் ஆண்டுடில் இலங்கை அரசும் அதனை உறுதிப்படுத்தி ஒரு தசாப்த காலம் கழிந்து விட்ட நிலையில் இன்று சிறுவர் உரிமைகள் பற்றிய குரல்கள் இங்கும் ஆங்காங்கே ஒலிக்கத் தொடங்கியுள்ளதானது அவர்களின் எதிர்காலம் சூனியமாகிவிடாது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

சிறுவர் உரிமைகள் பற்றி பேச விளைந்துள்ள அரசு தனியார் ஸ்தாபனங்கள், பொது நல அமைப்புக்கள் நீதி மன்றங்கள் மற்றும் சட்டவாக்கக் குழுக்கள் என்பன சிறுவர்களின் உயரிய நலன்கள் (The Best Interests of the Child) முழுமுதற் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும் எனக் கோசம் எழுப்பியுள்ளமை மகிழ்வைத் தரும் அதேசமயம், சிறுவர்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை துஷ்பிரயோகத்திற்குள்ளாக்குவோர் சிறுவர்களைச் சுற்றியுள்ள அவர்களின் பெற்றோர், அண்டை வீட்டார், உறவினர்கள் மற்றும் சிறுவர்களது நம்பிக்கைக்குரிய பெரியோர்களாகவே காணப்படுகின்றமை துயர் தரும் சேதியாகும்.

## சிறுவர் துஷ்பிரயோகம்

இவ்விடத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன என்ற வினாவிற்கு விடை காணவேண்டியது அவசியமாகும். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக மிகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விரைவிலக்கணமொன்று பின்வருமாறு கூறுகிறது 'சிறுவன் அல்லது சிறுமியொருவரின் ஆரோக்கியம் வளர்ச்சி, விருத்தி ஆகியவற்றிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சகல நடவடிக்கைகளும் அத்துடன் வேண்டப்படாத துன்புறுத்தல்களுக்கு இவர்களை உள்ளாக்குதலுமே சிறுவர் துஷ்பிரயோகம் என்ற பதத்தின் மூலம் வரையறுக்கப்படுகின்றது. மிகப் பொதுவான சில சிறுவர் துஷ்பிரயோகங்களை பட்டியல்படுத்துமிடத்து

- உடல் ரீதியான துன்புறுத்தல்கள் (அடித்தல், காயப்படுத்தல், தீயினால் சுடுதல் போன்றன.)
- பாலியல் துன்புறுத்தல்கள்.
- சிறார்களை வேலைக்கமர்த்தல்.
- உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள் (மூளைச் சலவை).
- போசணை, மருத்துவ சேவைகள் வழங்கப்படாமை.
- திட்டமிட்ட நஞ்சூட்டல், தேவையற்ற மருந்துகள் வழங்கப்படுதல்.

போன்றவற்றைக் கூறலாம்.

## அன்னியர்களல்ல

மேற்படி சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவோர் சிறுவர்களின் அன்னியர்களல்ல. அவர்களுக்கு மிக அண்மையாக இருப்பவர்களே ஆவர். யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை தற்பொழுது மிக அதிகளவான சிறுவர்கள் கல்வி உரிமை பறிக்கப்பட்டு வேலைக்கமர்த்தப்பட்டவர்களாக காணப்படுகிறார்கள்.

இடம்பெயர்வு, வறுமை என்பவற்றை காரணங்காட்டி பிள்ளைகளை வேலைக்கமர்த்தும் பெற்றோரின் பொறுப்பற்ற செயலுக்கு ஆதரவு கொடுப்பதில் சில தனியார் நிறுவன உரிமையாளர்கள் கடைமுதலாலிகள் போன்றோர் பெரும்பங்கு வகிக்கின்றனர். சிறுவர்களின் கட்டாய உரிமையாகிய கல்வி உரிமையைப் பறித்து அவர்கள் கடைநடத்திக் கொண்டிருப்பது கவலைக்குரியது.

இந்த இடத்தில் 'உண்ண உணவில்லாத போது கல்வி என்ன கல்வி? என்ற தர்க்க ரீதியான கேள்வி மூலம் தம் செயல்களுக்கு சமாதானம் கூறுவோர்க்கு ஒன்றைக் கூறலாம். சிறுவர்களை பாடசாலைக்குப் போகவிடாது தடுப்பதாலோ அவர்களை வேலைக்கமர்த்திப் பெறும் மிகச் சிறிய தொகைப் பணத்தினாலோ உங்கள் எதிர்கால வாழ்வில் ஒரு பெரிய பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தி விட முடியாதல்லவா? ஆகவே குடும்ப வருமான உயர்விற்குரிய வேறு சாதகமான வழிகளைக் கண்டறிவதுடன் பிள்ளைகளைப் பாடசாலைக்கனுப்புவது மிகமிக அவசியமான கடப்பாடாகும்.

## பாலியல் துஷ்பிரயோகம்

அடுத்து மிகப் பெரிய சிறுவர் துஷ்பிரயோகமாக சிறுவர்கள் மீதான பாலியல் ஹிம்சைகளைக் குறிப்பிடலாம். கீழ்மட்ட மற்றும் மேல்மட்ட குடும்பங்களிடையே காணப்படும் பொதுவான பிரச்சினையாக இது உருவெடுத்துள்ளது. சட்ட வயதடையாச் சிறுமிகள் பாலியல் ரீதியில் ஏமாற்றப்பட்டு வேண்டாத கர்ப்பங்களைத் தாங்கியவர்களாக வைத்தியசாலையில் அனுமதிப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. அத்துடன் பரவலாகக் காணப்டும் பாலியல் சேஷ்டைகள் பாலியல் ரீதியான பழித்தல்கள் என்பனவும் சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாகின்றது.

மேற்படி பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சட்ட ரீதியான உதவிகளைப் பெற்றுக் கொடுத்தாலுங்கூட அவர்களின் எதிர்கால வாழ்க்கை கேள்விக் குறிக்குள்ளாகி விடுகின்றது. எனவே வளர்ந்துவரும் சிறார்களுக்கு போதிய பாலியல் ரீதியான அறிவு கிடைக்கவும் அதன் அபாயங்களில் இருந்து சிறார்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கும் பெற்றோர்கள் துணைபுரிய வேண்டும்.

## பெற்றோரின் பங்கு

சிறுவர்கள் நல்லவர்களாக ஆளுமைமிக்கவர்களாக வளர்வதற்கு மிக அவசியமானது பெற்றோர்களுக்கும், சிறார்களுக்குமிடையில் இருக்கும் தொடர்பே ஆகும். சிறுவர்களின் உளவியலைப் புரிந்து அவர்களது தேவைகளை 'தெரிந்து வைத்துள்ள (நிறைவேற்ற வேண்டும் எனக் கூறவில்லை) பெற்றோர்கள் சிறந்த அப்பா, அம்மா ஆகிறார்கள். குழந்தைகளின் விருப்பங்கள் மிக வினோதமானவை. அவர்கள் பெரியோர்களைப் போல பிரதிபலிக்க வேண்டும் என எண்ணுவது தவறானதாகும் என்கிறார் ஒரு உளவியலாளர். பொதுவாக எல்லாப் பெற்றோர்களுமே தம் குழந்தைகளுடன் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்த வேண்டும் என விரும்பினாலும் கூட, அந்தக் கலை ஒரு சிலருக்கு மட்டுமே கிட்டுகிறது. இது குறித்து 'Between Parents and Child' என்று நூலில் Dr. Haim. G.Ginott எழுதுகையில் "எந்தவொரு பெற்றோரும் அதிகாலையில் விழித்தெழும்போதே, தமது குழந்தையின அன்றைய பொழுதை மோசமாக்கி விடும் நோக்குடன் விழித்தெழுவதில்லை' இன்றைக்கு எனது குழந்தையைத் திட்டவேண்டும், குற்றம் குறைபிடிக்க வேண்டும், அவமானப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை. திட்டல், வாக்கு வாதம், சண்டை எதுவுமே இன்று இருக்கக்கூடாது என்பதே அவர்களது காலை நேரத்து விருப்பமாக இருக்கிறது. ஆனால் இவ்வளவு நல்ல விருப்பங்கள் இருக்கும் போதே, எப்படியோ சண்டை வெடித்து விடுகிறது, மீண்டுமொரு முறை நாம் சொல்ல விரும்பாத சொற்களை நாமே விரும்பாத தொனியில் உச்சரித்து விடுகிறோம்" எனச் சொல்கிறார் டாக்டர் ஹெய்ம் ஜினோட்.

சிறுவர்களை சிறந்த முறையில் வளர்ப்பதென்பது அவர்களின் உரிமைகளை மறுப்பது அல்லது அவர்களை துஷ்பிரயோகத்திற்குள்ளாக்குவதற்கு மறுதலையானது. எனவே உங்களது எதிர்காலச் சந்ததியினர் ஆளுமை மிக்கவர்களாக உருவாவது பெரியோர்களதும் பெற்றோர்களதும் கையிலேயே தங்கியுள்ளது. நீங்கள் அவர்களை துஷ்பிரயோத்திற்குள்ளாக்காதிருப்பதுடன் அதிலிருந்து உங்கள் பிள்ளைகளை காப்பாற்றுவதும் உங்களது பொறுப்பேயாகும்.

**ரீ. ரீ. மயூரன்**

* * *

## பேருந்து அடிக்கடி பழுது

(மந்திகை)

கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி காலை வேளையில் சேவையில் ஈடுபடும் வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து அடிக்கடி பழுதடைவதாக பயணிகள் புகார் செய்துள்ளனர்.

இவ்வாறு அடிக்கடி பழுதடைவதால் அதில் பயணம் செய்வோர் குறிப்பாக அரச உத்தியோகத்தர்கள் உரிய நேரத்திற்கு கடமைக்குச் செல்ல முடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (உ-23)

## திருமலையில் இன விகிதாசாரம் மாற்றம்

(திருகோணமலை)

திருகோணமலையில் இன விகிதாசாரம் முன்னரை விட மாற்றம் அடைந்துள்ளது என திருகோணமலை மாவட்டச் செயலகம் வெளியிட்டுள்ள மக்கள் தொகை விரப் பட்டியிலில் குறிப்பிட்டுள்ளது.

இவ்விபரப் பட்டியலின்படி, சிங்களவர் 30 வீதமாகவும் தமிழர் 32 வீதமாகவும் முஸ்லீம்கள் 38 வீதமாகவும் ஏனையோர் 2 வீதமாகவும் உள்ளனர்.

குடியேற்றங்கள் மூலம் திருகோணமலையில் சிங்களவர் அதிகமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## மனித உன்னதம் நிகழ்வு

(மந்திகை)

வடபிரா[illegible]ிய சத்திய சாயி சேவா நிறுவனத்தின் மனித 'உன்னதம்' நிகழ்வு எதிர்வரும் 4, 5ஆம் திகதிகளில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி முதல் மாலை 5மணி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி கல்வித் திணைக்கள பணிப்பாளர் வி.ரி. செல்வரட்ணம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். (உ-23)

## 19வது திருத்தசட்டத்திற்கு புலிகளும் ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள 19வது திருத்தச் சட்ட மூலத்திற்கு விடுதலைப் புலிகள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் புலித்தேவன் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையை தடங்கலின்றி முன்னெடுக்க ஜனாதிபதியிடம் இருக்கும் அதிகாரத்தைக் குறைப்பது இன்றியமையாதது.

எனவேதான், 19வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை தாம் ஆதரிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (உ)





"ச. வே. பஞ்சாட்சரம் கவிதைகள்" நூல் வெளியீட்டு விழாவில் நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியக் கல்லூரி விரிவுரையாளர் பண்டிதர் செ. திருநாவுக்கரசு நிகழ்த்துவதையும், அடுத்த படத்தில் முன்னாள் அதிபர் செ. சோதிப்பெருமாள் மங்கள விளக்கேற்றுவதையும் காணலாம். ஆசிரியர் ந. தங்கவேல் கவிஞர் பஞ்சாட்சரம் ஆகியோரும் அருகில் காணப்படுகின்றனர்.

## யாழ் பல்கலைக்கழக பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் பரீட்சைகளின் முடிவுகள் பல நேற்று முன்தினம் வெளியாகியுள்ளன.

கல்வியியல் முதுமானி, பொதுக் கலைமானி பகுதி II (உள்வாரி), பொதுக் கலைமானி (வெளிவாரி), பட்டப்பின் படிப்பு கல்விச் சான்றிதழ், சிறப்பு விஞ்ஞான பரீட்சை (தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், கணிதம், புள்ளி விபரவியல்) ஆகியவற்றின் இறுதிப் பரீட்சை முடிவுகளே வெளியாகியுள்ளன. (ம)

*அன்பு மாணவர்களே!*

உங்களின் கவிதைத் திறனை வெளிப்படுத்த நவராத்திரிக் காலத்தில் வலம்புரியில் வெளிவரும்

**நவராத்திரி பாமாலைக்கு**

4 தொடக்கம் 8 வரிக்குட்பட்ட கவிதைப் பாமாலைகளை அனுப்பி வையுங்கள்.

**மு.குறிப்பு:** மாணவர்களுக்கு மட்டும் இதில் சந்தர்ப்பம் வழங்கப்படுவதால் மாணவர்கள் தமது சொந்த ஆக்கத்தை மட்டுமே அனுப்பி வைக்க வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :-

"நவராத்திரி பாமாலை"
வலம்புரி
இல.15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

### 19 வது அரசியல் அமைப்பு

# சீர் திருத்தத்தினை ஆதரிக்க 31 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தயார்

(கொழும்பு)

பத்தொன் பதாவது அரசியல் அமைப்பு சீர் திருத்தத்தை ஆதரிப்பதற்கு எதிர்கட்சி உறுப்பினர்கள் 31 பேர் முன் வந்துள்ளதாக ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆதரிப்பவர்களில் 20 பேர் அடுத்த சில தினங்களில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவைச் சந்தித்து பேச இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு தேர்தலுக்கு முகம்கொடுக்கமுடியாதநிலையிலேயே அவர்கள் இந்த முடிவை எடுத்திருப்பதாக குறிப்பிட்ட மேற்படி அமைச்சர் ஆதரவு கொடுக்கவுள்ள உறுப்பினர்களின் பெயர் விபரங்களை வெளியிட மறுத்துவிட்டார்.

அத்துடன், நாடாளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையான ஆதரவை திரட்டும் முயற்சியில் பிரதமர்ரணில்விக்கிரமசிங்கா மும்முரமாக ஈடுபட்டிருப்பதாக அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, ஆளும்கட்சியைச் சேர்ந்த ஆறுபேர் தமது பக்கம் வரஇருப்பதாக எதிர்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி குறிப்பிட்டுள்ளது.

(உ-7)

### சிலியில் இருந்து இறக்குமதி செய்த

# 75 ஆயிரம் ரின் மீன்கள் பாவனைக்குதவாதவை

(கொழும்பு)

சதொச நிறுவனம் சிலி நாட்டில் இருந்து இறக்குமதி செய்த ரின் மீன்களில் 75 ஆயிரம் ரின் மீன்கள் பழுதடைந்தவை எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சிலியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 425 கிராம்களைக்கொண்ட ஒரு இலட்சத்து 50ஆயிரம்ரின்மீன்களில் அரைப்பங்கு நிலையியற் கட்டளைக்கு அமையாத வகையில் இருப்பதை வாணிப அமைச்சின் விசேட பரிசோதனைப் பிரிவு நடத்திய திடீர் பரிசோதனையின் போது கண்டுபிடித்துள்ளது.

இவை பக்டீரியா செயற்பாட்டினால் பழுதடைந்துள்ளதால் உணவுக்கு உபயோகிக்க தகுந்தவை அல்ல என இனம் காணப்பட்டுள்ளன.

(உ)

### சமாதானத்துக்கு வலுவூட்டும்

# தமிழ் - சிங்கள புத்திஜீவிகள் மாநாடு யாழில் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

சமாதான முன்னெடுப்புகளுக்கு மேலும் வலுவேற்றும் வகையில் தமிழ்-சிங்கள புத்திஜீவிகள் மாநாடொன்றை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

கொழும்பு நாளிதழ் ஒன்று இச் செய்தியை வெளியிட்டுளளது.

தென் பகுதியில் உள்ள சிங்கள அறிஞர்கள், புத்தி ஜீவிகள், முக்கியஸ்தர்கள் மற்றும் இந்தியாவில் இருந்து கலவி மான்களும் 4 நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

''மனுடம் நோக்கிய விடுதலை'' என்ற தொனிப்பொருளில் நடத்தப்படும் மாநாட்டின் நோக்கம், விடுதலைப் போராட்டம் பற்றி தென்னிலங்கை மக்களுக்கு தெளிவுபடுத்துவதாகும்.

இம் மாத நடுப்பகுதியில் மேற்படி மாநாட்டை நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ)

### தடுத்து வைக்கப்பட்ட

# 41 பாகிஸ்தானியர் சனியன்று நாடு திரும்பினர்

(கொழும்பு)

இலங்கையின் குடிவரவு குடியகல்வுச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த 41பாகிஸ்தானியர்கள் கடந்த சனியன்று தாயகம் திரும்பியுள்ளனர்.

இலங்கையில் தங்கியிருப்பதற்கான தகுந்த விஸா, கடவுச் சீட்டு மற்றும் அது தொடர்பான ஆவணங்களைக் கொண்டிருக்கவில்லை என்ற குற்றச் சாட்டின் பேரில் 51 பாகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

பாகிஸ்தானின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகராலயம் சட்டத்தரணி யு எஸ். மர்ஸிக் ஊடாக 41 பேரின் கடவுச் சீட்டு, விஸாமற்றும் அது தொடர்பான ஆவணங்களை நீதி மன்றத்தில் சமர்ப்பித்தியருந்தது. 10பேருக்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

இதனடிப்படையில்மேற்படி 41 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். 10 பேரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்

(உ)

### வடமராட்சி வலய

# திலீபன் ஞாபகார்த்த ஆக்கப் போட்டி முடிவுகள்

(மந்திகை)

தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 15 வது ஆண்டு நினைவுதினத்தை யொட்டி வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சு, சதுரங்கப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முடிவுகள் வருமாறு;

**கவிதைப் போட்டி**

(தரம்10, 11)

முதலாம் இடம்;-

இ.சௌமியா, இ.லேகதாரணி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,

இரண்டாம் இடம்:-

ம. பிரசத் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி,

மூன்றாம் இடம்:-

சி.கௌசல்யா- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை,

தரம் 12, 13

முதலாமிடம்:- த. அஜந்தகுமார்- வடஇந்து மகளிர் கல்லூரி.

இரண்டாமிடம்: எஸ். சங்கீதா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

மூன்றாம்இடம்:- ம. கோகுலவாணி- உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

**பேச்சுப் போட்டி**

தரம்10, 11

முதலமிடம் :ஜே. இந்துஷா- வல்வை மகளிர் கல்லூரி,

இ. சர்ஷிக்கா- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

இரண்டாம் இடம்: செ. பிரதீபா- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.

மூன்றாம் இடம்:- இ. ரட்ணா தேவி, உடுப்பிட்டிமகளிர் கல்லூரி,

தரம் 12, 13

முதலமிடம்:-ச. சசிகுமார் விக்னேஸ்வரா கல்லூரி,

இரண்டாமிடம்:- அ. பகீரதன் வேலாயுதம் மகாவித்தியாலயம்

மூன்றாமிடம் :-கி. சாமந்தி ஞானசாரியார் கல்லூரி,

**கட்டுரைப் போட்டி**

தரம் 10, 11

முதலமிடம்:- கு. அபிமாறன் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன்.

இரண்டாமிடம் :- ஞா. தாரணி வட- இந்து மகளிர் கல்லூரி.

மூன்றாமிடம்:- ரா. கீர்த்தனா வட மத்திய மகளிர் கல்லூரி.

தரம் 12, 13

முதலாமிடம் :-ச ரேணுகா மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

இரண்டாமிடம்:- ச. மணிவண்ணன் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம்.,

மூன்றாமிடம்:- அ சிந்துஜா உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்.

**சதுரங்கம்**

தரம்10, 11(ஆண்கள்)

முதலாமிடம்-பே.ரமணன் கரணவாய் மகாவித்தியாலயம்,

இரண்டாமிடம்-இ. சுகீந்திரன் கரணவாய் மகாவித்தியாலயம்,

மூன்றாமிடம்-எஸ், சுபிக்சாந் கரணவாய் மகாவித்தியாலயம்.

தரம்10 11(பெண்கள்)

முதலாமிடம்—ஆ சுராங்கி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

இரண்டாமிடம்—ஏஸ் மாதங்கிவடமத்தியமகளிர்கல்லூரி

மூன்றாமிடம்-நா, பிருந்தா கரணவாய் மகாவித்தியாலயம்

தரம்12, 13(ஆண்கள்)

முதலாமிடம்-ச.கேசவன் கரவெட்டிவிக்னேஸ்வராக் கல்லூரி

இரண்டாமிடம்-பு ரவிபோகன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

மூன்றாமிடம்-சி கரன் விக்னேஸ்வரா கல்லூரி

தரம்12, 13(பெண்கள்)

முதலாமிடம்-வே. கல்பனா நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம்

இரண்டாமிடம்-ஆ. துஷயந்தி விக்னேஸ்வரா கல்லூரி

மூன்றாமிடம்-கே.சோபனா நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

### யாழ்.வர்த்தக சமுகம்

# பின்பற்றவேண்டிய விடயங்களை யாழ்.வணிகர்கழகம் அறிவித்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தகர்களுடன் விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்ட அரசியற்பிரிவினர் கடந்தமாதம் நடத்திய கலந்துரையாடல்களின் அடிப்படையில் வர்த்தகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை யாழ்வணிகர் கழகம் வெளியிட்டுள்ளது

இத்தீர்மானங்கள் நேற்று முதல் அமுலுக்கு வருவதாகவும் வணிகர் கழகம் அறிவித்துள்ளது

தீர்மானங்கள் வருமாறு

★ சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களும் / முகாமையாளர்களும் தமது வர்த்தக ஸ்தாபனங்களை சனிக்கிழமைகளில் பிற்பகல் 3 மணிக்கும் (புதிய நேரம்) ஞாயிறு, போயா மற்றும் சகல வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களை மூடி வர்த்தக ஊழியர்களுக்கு ஓய்வு வழங்க வேண்டும். இத்தினங்களில் வர்த்தக நிலையங்களில் திருத்தவேலை, இருப்பெடுத்தல் போன்றவை செய்ய வேண்டுமாயின் யாழ் வணிகர் கழகத்தின் முன் அனுமதி பெற்று அதற்கென வழங்கப்படும் அறிவித்தல் பலகையை தொங்கவிட்டபின் அவ்வேலையை அத்தினத்தில் செய்யலாம்.

★ ஹோட்டல், தேநீர்ச் சாலைகள், மருந்துக்கடைகள் (மருந்து விற்கும் பகுதி மட்டும்), புதினப்பத்திரிகை கடைகள், தொலைபேசிச் சேவை மட்டும் நடாத்தும் ஸ்தாபனங்கள் (பதிவு செய்யப்பட்டது), வீடியோக் கடைகள், பழவகை மட்டும் விற்கும் கடைகள், மரக்கறி மட்டும் விற்பனை செய்யும் கடைகள், அந்தியகால சேவைசெய்யும் கடைகள் ஆகியனமட்டும் மேற்குறிப்பிட்ட தினங்களில் திறந்திருக்கலாம்: அன்று வேலை செய்யும் ஊழியர்களிற்கு குறிப்பிட்ட கிழமைக்குள் பதில் ஓய்வு விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

★ வர்த்தக ஸ்தாபனங்களில் வேலைசெய்யும் சகல பெண் ஊழியர்களும் வர்த்தகஸ்தாபனங்களில் பிற்பகல் 5.30மணிக்குப் பின் (புதிய நேரம்)கடமையில் ஈடுபடுத்தப்படலாகாது.

★ சகல வர்த்தகஸ்தாபனங்களும் யாழ்வணிகர்கழகத்தில் அங்கத்தவர்களாக பதிவுசெய்து அங்கத்தவர் அடையாள அட்டை வைத்திருப்பதுடன்கழக யாப்பு சட்டதிட்டங்களை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

★ மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு அமையநடக்காது விடுமுறைதினங்களில் திறந்திருக்கும் வர்த்தகஸ்தாபனங்களுக்கு ரூபா1000/- தண்டப்பணமாக அறவிடப்படும்.

(இ)

### ஜனாதிபதி பணிப்பின் பேரில்

# மாணவர்களின் ஒழுக்கம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க விசேடகுழு

(கொழும்பு)

பாடசாலை மாணவர் மட்டத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன மோசமடைந்து வருவது பற்றிஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க விசேட குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா கல்வி கலாசார மனிதவள அபிவிருத்தி அமைச்சர் கருணாசேனகொடித்துவக்கிடம்கேட்டுள்ளார்.

இவ்வாறு அமைக்கப்படும் குழுவிற்கு கல்வியமைச்சின் செயலாளரே தலைமைதாங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி யோசனை தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் இதுவரை காலமும் இல்லாத ஒருகுழப்பமான சூழ்நிலை தற்போது தோன்றத்தொடங்கியுள்ளது.

இது மாணவர்கள் மத்தியில் பாரதூரமான மோதல்கள் உண்டாவதற்கு வழி ஏற்படுத்தி உள்ளது.

கிரியெல்ல, கம்பஹா, இரத்தினபுரி கொழும்பு, டி.எஸ். சேனநாயக்கா, ஆனந்தாக்கல்லூரிகளிலும் இடம்பெற்ற துரதிஷ்ட வசமான சம்பவங்களை இதற்கு உதாரணங்களாககாட்டியுள்ளஜனாதிபதி இச்சம்பவங்கள் குறித்து இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அமைச்சரைக் கேட்டுள்ளார்

(உ-8)

கருவியும்காலமும்செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.
— குறள்

வலம்புரி

# அமைச்சரின் விஜயம்

தீவகத்தின் மண்டைதீவில் இதுவரை புனரமைப்புப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை. இது விடயத்தில் அரச அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறித்து கடந்த 22 ந் திகதி 'மண்டைதீவின் அவலம்' என்ற தலையங்கத்தில் இப் பகுதியில் எழுதியிருந்தோம். இதனையடுத்து இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்கள் மண்டைதீவுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்துள்ளார். மண்டைதீவு மக்களின் அவலம் குறித்த செய்தியை அறிந்தவுடன் அமைச்சர் மகேஸ்வரன் அங்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்தமை உண்மையில் பாராட்டுக்குரியது. மக்களின் அவல நிலையைக் கேள்விப்பட்டவுடன் அவர் எந்த ஆரவாரமின்றி அந்த இடத்திற்கு விரைந்துள்ளமை அவர்பால் மக்களுக்கு நம்பிக்கையை வலுவடையச் செய்துள்ளது.

1990 ம் ஆண்டு கோட்டையை மீட்கவந்த இராணுவம் மண்டைதீவில் மேற்கொண்ட கொடூரத் தாக்குதலின் போது 71 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டும் காணாமல் போயுமுள்ளனர். இந்த அனர்த்தத்திற்குப் பின்னர் 1991 ம் ஆண்டு ஒக்டோபரில் முழுமையான இடப்பெயர்வை மண்டைதீவு மக்கள் சந்தித்தனர்.

இந்நிலையில் தற்போது அம் மக்கள் மண்டைதீவில் குடியமர முடியாதிருக்கும் போது தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ

# சத்தியத்தைப் போற்றிய மகாத்மாகாந்தி
# மதங்கள் அனைத்திலும் ஒரே தெய்வம் என்றார்

## இன்று காந்திமகான் ஜயந்தி தினம்

மகாத்மா காந்தி அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி முதலிய துறைகளில் பல அரிய காரியங்களைச் சாதித்து முடித்தார். அவருக்குக் கடவுள் மீது இருந்த உறுதியான நம்பிக்கையும், ஆண்டவனை அறிய அவர் செய்து வந்த இடைவிடாத சாதனைகளும் தான் அவைகளுக்கு அடிப்படையாகும். காந்தியடிகளுடைய மனத்தைக் கவர்ந்த பிரார்த்தனைப் பாட்டு 'ரகுபதிராகவராஜா ராம்' என்பது. இது அனைவருக்கும் தெரிந்தவிஷயம். காந்தி மகான் தம்முடைய நாட்டுக்காகவும், மனித சமூகத்துக்காகவும் அநேக காரியங்களைச் செய்தார். அவற்றில் மகோன்தமான வெற்றிகள் அடைந்து புகழ் பெற்றார். அரசியல் துறையிலும் சமுதாய சீர்திருத்தத் துறையிலும், தொழில் துறையிலும் பல பிரசித்தி பெற்ற பணிகள் ஆற்றினார். இந்தியாவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த காந்தியடிகள் வெறும் அரசியல் வாதியல்ல. தெய்வத்தைக் காட்டித் தந்த முனிவருமாவார்.

### அஹிம்சை

காந்தி மகான் மிகக் கூர்மையான மூளையும் விஞ்ஞானக் கல்வியும படைத்தவர் இந்த யுகத்தின் ஆட்சேபனை, ஐயப்பாடுகள் அனைத்தையும் அறிந்த இவர் மதங்கள் அனைத்திலும் ஒரே தெய்வம் என்பதைப் போதித்தார். இருபதாம் நூற்றாண்டில் ஒரு ஆஸ்திகராக விளங்கினார். 'நான் பாவம் ஏதும் செய்யாமல் உண்மையை விட்டுப் பிறழாமல் எண்ணம் பேச்சு, செயல் மூன்றிலும் பழுதற்ற அஹிம்சையைக் கடைப் பிடித்து நடக்க ஆசைப் படுகிறேன். இதற்காகவே மிக அலைந்து வருகின்றேன். என்னுடைய சக்தியோ அதற்குப் போதியதாக இல்லை நான் ஆசைப்படும் நிலையே தான், நாம் அனைவரும் நாடவேண்டிய நிலை என்பதை அறிவேன். ஆயினும் ஆசைப்படி நடந்து கொள்ள என்னால் முடியவில்லை இந்த மலைமேல் ஏறுவது மிகவும் கடினமாக இருக்

உண்டாகும் வருத்தமே என் உள்ளத்துக்கு மெய்யான இன்பம்தருகிறது. ஏறும் ஒவ்வொரு அடியும் எனக்கு ஒரு புதுசக்தி தருகிறது. அடுத்த அடிஎடுத்து வைக்கப்பலம்தருகிறது;' என்ற அவரின் கூற்றை 'யங்இந்தியா' இதழ் 9-4-1925ல் பிரசுரித்துள்ளது.

### கடவுள் நம்பிக்கை

கடவுளை நான் என் கண்ணால் காணவில்லை வேறு விதத்திலும் நான் கண்டு விட்டேன் என்று சொல்ல முடியாது உலகம் எல்லாம் ஈசன் ஒருவன் இருக்கிறான் என்று நம்புகிறது. அந்த நம்பிக்கையைக் கொண்டு நானும் வாழ்க்கையைச் செலுத்துகிறேன். எனக்கு உண்டாகியிருக்கும் இந்த நம்பிக்கை அழிக்கமுடியாத நம்பிக்கை. அழியாத நம்பிக்கை பிரத்யக்ஷ பிரமாணத்துக்குச் சமமாகவே

தொகுப்பு; **மதிவாணர்**

ஆய்விடுகிறது என்றாலும் எவ்வளவு உறுதியானதாயினும் ஒருநம்பிக்கையைப் பிரத்தியக்ஷமாகக் கண்டேன் என்று சொல்லுவது உண்மைக்கு மாறாகும். ஆனபடியால் என்னுடைய கடவுள் நம்பிக்கைக்குச் சரியான ஒருசொல்லை நான் காணவில்லை என்று அவர் தன் சுயசரிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தைப் பருவம் முதற்கொண்டு உண்மையை வழிபட்டு வருகின்றேன் என்று நான் என்னைப்பற்றிச் சொல்லிக்கொள்ளலாம். உண்மையைக் கடைப்பிடிப்பது எனக்குச் ஸ்வபாவமாகவும் எளிதாகவும் இருந்துவந்தது. தேடித்தேடி ஒன்று கண்டேன் அந்தஉண்மைஎன் கண்களைத் திறந்தது. சத்தியமே தெய்வம் என்பதைக் கண்டேன். சாதாரணமாகத் தெய்வமே சத்தியம் என்பார்கள். அதைநான் இவ்வாறு மாற்றிக்கொண்டேன். மெய்மையே கடவுள் என்பதை அறிந்தேன். அதைக் கண்டபின் நான் கடவுளைப் பிரத்திக்ஷமாகவே கண்டேன் என்றும் சொல்லலாம். என் உடலின் ஒவ்வொரு நரம்பி

நிற்பதை என் உணர்ச்சியில் காண்கிறேன். உணர்ச்சி முழுவதிலும் ஒருபொருளை உணர்ந்து விட்டால் அது கண்களின் விழியாற் காண்பதை விட குறைவில்லை. மனமானது ஐயமறக் கண்டுவிட்டால் அதற்கும் பிரத்யக்ஷக் காட்சிக்கும் பேதமில்லை' என்ற அவரின் கருத்தை ஹரிஜன் பத்திரிகை 1942-8-9ல் வெளியிட்டது.

### சத்தியமே கடவுள்

சத்தியம் என்பது பலகிளைகள் கொண்டமரம் வாய்மை மட்டுமல்ல சத்தியம் எண்ணத்திலும் உண்மை வேண்டும் உண்மை என்பது பௌதிக உலகத்தில் நாம் வைத்துக் கொண்டிருக்கும் உண்மை மட்டுமல்ல, பேருண்மை, மெய்ப் பொருள் என்கின்ற பேருண்மை அதாவதுகடவுளேயாகும். கடவுளுக்கு குணங்களும் இலக்கணங்களும் ஆயிரக் கணக்கில் சொல்கிறார்கள். அவை அனைத்தும் என் மனத்தைக் கவர்ந்தாலும் சத்தியம்

ஒன்றே நான் வழிபடும்மூர்த்தி அந்தமூர்த்தியை நான் இன்னும் முற்றிலும் காணவில்லை காண முயன்று வருகிறேன். அதற்காக வேறுஎதையும் பொருட்படுத்தாமல் இழந்து விடச் சம்மதப் படுவேன் உயிரும் உட்பட! இதற்கு வேண்டிய உறுதியை ஆண்டவன் அருள்வானாக! பூரண உண்மையைக் காணும் வரையில் நான் கண்ட உண்மையே உண்மையென்று கருதிக் கடமைகளைச் செய்து கொண்டு போக வேண்டும். சம்பூர்ண உண்மையைக் காணும் வரையில் ஔபாதிக உண்மை தான் எனக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகும். அதுவே என் யுத்தங்களில் சக்தியும் கேடயமும் ஆகும். அதுவே என் நடைபாதை இந்தப் பாதை கத்தி முனையைப் போன்றது இந்த ஒடுக்கமான பாதையே நான் கண்டபாதைகளில் தாமதமும் தவறுமின்றி ஊர்போய்ச் சேரும் பாதை, பிழைபலவாயினும் இமயம் போன்று பெரிதாயினும்நேர்வழியில்போகும் வரையில் எனக்கு அதுசிறிதாகவேபடும் குற்றத்தின் கேடின்றித் தப்பும் வழி அதிலேதான் உண்டு யாத்திரை தடைப்படுவதில்லை. இப்படி நேர் வழியில் செல்லும் யாத்திரையில் சம்பூர்ண உண்மையே. மெய்ப் பொருளே ஒவ்வொரு சமயம் காட்சியும் தந்திருக்கிறது- மெய்பொருள் ஒன்றே உண்மை மற்றதனைத்தும் பொய் என்பதை இந்த யாத்திரையில் கண்டு கொண்டு வருகின்றேன்.

இன்னும் ஒன்று கண்டு வருகின்றேன்: நான் செய்வதைச் சிறு குழந்தையும் செய்யக் கூடும். உண்மைப் பயிற்சிக்கு வேண்டிய கருவிகள் மிக எளியவை. அகங்காரிகளுக்கு அந்தக் கருவிகள் மிகவும் கஷ்டம், குற்றம் அறியாத குழந்தைக்கு மிகச் சுலபம். உண்மையை நாடுகிறவனுக்குக் கர்வம் கூடாது. தன்னைத் தூசிக்குச் சமானமாகப் பாவிக்கவேண்டும். தூசியைக் காலில் துவைத்து உலகம் நடக்கிறது. ஆனால் உண்மையைக் காதலிப்பவன், அந்தத் தூசியின் கீழ்த்துவைபட்டு நிற்கும் தூசியாகத் தன்னைக் கருதவேண்டும். அப்போதுதான் மெய்ப்பொருள் நமக்குக் காட்சி தரும்? என்று தனது சுய சரிதையில் காந்திமகான் குறிப்பிடுவதை நாம் உற்று நோக்க வேண்டும். உண்மையை இதன் மூலம் அறிவது நன்று. ■

# விடுதலைப் புலிகளின் மத்திய வங்கி குறித்து விசாரணை செய்ய உத்தரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மத்திய வங்கி ஒன்றை நடத்தி வருவதாக கிடைத்த தகவலை அடுத்துஇது தொடர்

கையில்;

மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வங்கிகளில மாத்திரம் கணக்கு வழக்குகளை மேற்கொள்ளுமாறு

கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் மண்டைதீவுப் பக்கம் தலைகாட்டாமல் விட்டமை எல்லாம் தேர்தல் காலத்து புரசை மட்டும்தான் என்பதனை வெளிப்படுத்துவதாகவுள்ளது.

தமது பிரதேசங்களில் மீளக் குடியமர்த்தும் விடயங்களில் மும்முரமாக ஈடுபட்டுள்ள கூட்டமைப்பு எம்.பிகள் மண்டைதீவின்புனரமைப்பில்-மீள்குடியமர்வில் அக்கறை காட்டத் தவறியமை மிகவும் வேதனைக்குரியது. இவ் விடயத்தில் அமைச்சர் மகேஸ்வரன் மண்டைதீவுக்கு நேரில் சென்று நிலமைகளைக் கண்டறிந்ததுடன், மக்களின் குறைகளையும் கேட்டறிந்தமை அவரின் சந்தர்ப்ப வாதமற்ற செயற்பாட்டைச் சுட்டி நிற்கிறது.

கொள்ள என்னால் முடியவில்லை இந்த மலைமேல் ஏறுவது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆயினும் ஏறும் போது பிரத்திக்ஷமாகவே கண்டேன் என்றும் சொல்லலாம். என் உடலின் ஒவ்வொரு நரம்பிலும் அவன் ஊடுருவிப் பரந்து

# தினசரி தியானம்

## கடவுளின் நிலைத்த தன்மை

கடவுள் இருக்கிறாரா? தவறான செயலைச் செய்வதினின்றும் உங்களைத் தடுக்கும் ஏதோ ஒரு குரலை உங்களுக்குள் நீங்கள் அவ்வப்போது உணர்ந்திருக்கிறீர்களா? உங்களுள் இருந்து உங்களை எச்சரிக்கும் இக்குரல் யாருடையது? தவறு செய்த பின், ஒருவர் அமைதியின்மையையும், சஞ்சலத்தையும் உணர்வதில்லையா? எது இப்படிப்பட்ட உணர்வை நமக்குத் தந்தது? ஒரு நல்ல செயலைச் செய்து முடித்த பின் உங்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படவில்லையா? மகிழ்ச்சியை உண்டாக்கியவர் யார்? இவையெல்லாம் சர்வ வல்லமை பொருந்திய ஏதோ ஒரு சக்தி இருக்கிறது என்பதற்குப் போதுமான சான்றுகளாகும்.

**சுவாமி சிவானந்தர்**

தமிழீழ விடுதலைப் புலிகள் மத்திய வங்கி ஒன்றை நடத்தி வருவதாக கிடைத்த தகவலை அடுத்துஇது தொடர்பாக விசாரணை செய்யுமாறு மத்திய வங்கியின் பிரதி ஆணையாளர் டபிள்யு. எ. விஜயவர்த்தனா உத்தரவிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மத்திய வங்கி பிரதி ஆணையாளர் டபிள்யு. எ. விஜயவர்த்தனா கருத்துத் தெரிவிக்க மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வங்கிகளில மாத்திரம் கணக்கு வழக்குகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு மத்தியவங்கி உத்தரவிட்டுளளது.

இந் நிலையில், இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுககப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ம)

# மண் அணையை அகற்ற மக்கள் கோரிக்கை

(மந்திகை)

மந்திகைச் சந்தியில் இருந்து புலோலி பல்லைப்பை வரை மக்கள் குடியிருப்புகளை ஊடறுத்துச் செல்லும் மண் அணையை அகற்றுமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1996ஆம் ஆண்டு யாழ். குடாநாடு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குவந்ததை அடுத்து பாதுகாப்புக் கருதி மேற்படி மண் அணை அமைக்கப்பட்டது. அத்துடன், அப்பகுதிகளில் மிதிவெடிகளும் புதைக்கப்பட்டன.

இதனால் பெருமளவிலான விவசாய நிலங்களும்வீடுகளும் இதற்குள் முடங்கியிருந்தன.

தற்போது மந்திகை வைத்தியசாலைக்குப் பின்புறமாகவுள்ள விவசாய நிலத்தின் ஒருபகுதி மாத்திரம் சீர்செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ- 23)

# அரசியல் அமைப்பில் திருத்தத்தை கொண்டுவர சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டும்

## 19வது திருத்த சட்டத்திற்கு எதிரான மனுவில் சட்டத்தரணி சில்வா வாதம்

(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதாக இருந்தால் அது மக்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படல் வேண்டும். அதற்காகத்தான் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப் பட வேண்டுமென்பது எனது தாழ்மையான சமர்ப்பணமாகும். இவ்வாறு 19வது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விசாரணைக்கு நேற்று ஏழ நீதியரசர்கள் கொண்ட குழுவினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பொதுஜன ஐக்கியமுன்னணியின் சார்பில் ஆஜராகி வாதாடிய சட்டத்தரணி எச்.என்.டி. சில்வா தெரிவித்தார்.

19வது அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதாவுக்கு எதிராக மெத்தம் 32 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பொதுஜன ஐக்கியமுன்னணி, லங்கா சமசமாஜகட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள்விடுதலை முன்னணி ஆகிய அரசியற் கட்சிகள் உட்பட பல தனிப்பட்ட நபர்களும் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். சட்டத்தரணி எச்.என்.டி சில்வா தொடர்ந்து வாதிடுகையில்,

அரசியலமைப்பு சட்டம் மக்களுக்காக வரையப்படுவது அதில் திருத்தம் கொண்டுவருவதாக இருந்தால் அதனை மக்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும். எனவே 19வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறை வேற்றப்பட்டாலும் கூட சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படவேண்டும் என நீதிபதிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

ஜேர்மன் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் 20ம் பிரிவுடன் நமது அரசியலமைப்பின் 3வது 4வது சரத்தை ஒப்பிட்டு வாதிட்ட அவர் மக்களின் இறைமையை உறுதி செய்ய சுதந்திரமாக வாக்களித்தல், தாங்கள் விரும்பிய அரசாங்கத்தை நிறுவுதல் போன்றவை இந்த சரத்துக்களுடன் ஒத்துப்போவதாக தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ஷிராணி பண்டாரநாயக்கா, எச்.டபிள்யூ. வடுகொடபிடிய, அமீர் இஸ்மாயில, பி.எதுசூரியா, எஸ்.எச்.யாப்பா, ஜே.ஏ. என்.டி.சில்வா ஆகியோர் முன்னிலையில் இம்மனுக்கள் விசாரணை செய்யப்படுகின்றன. (ந)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு சிங்கப்பூர் அமைச்சர் ஆலோசனை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர் இந்த விடயம் பற்றி யாரிடமாவது ஆலோசனை கேட்க வேண்டுமென்று நான் நினைததேன். சிங்கப்பூரின் சிரேஷட அமைச்சர் லீ-கான்-யூவை சந்தித்து எனது திட்டங்கள் பற்றி கூறினேன். அவர் எனக்களித்த ஆலோசனைகள் உண்மையாகவும் பயனுள்ளவையாகவும் இருந்தன. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இதுவரை இரகசியமாக இருந்த விடயம் பற்றி தெரிவித்துள்ளார்.

எத்தகைய ஆலோசனை தரப்பட்டது என்று இப்போது நான் கூற மாட்டேன். எனது சுயசரிதையை எழுதும் போது அதில் இதனை தவறாது குறித்து விடுவேன். சிங்கப்பூர் பிறீமா நிறுவனம் இலங்கையில் தனது 25 ஆவது நிறைவு நிகழ்வை கொழும்பு கில்ரன் ஹோட்டலில் கொண்டாடிய போது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போது பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளிற்கு சிங்கப்பூர் பிரதமர் கோ அவர்களும் சிரேஷ்ட அமைச்சர் லீ-கான்-யூவும் பெரும ஆதரவு தந்து வருகின்றார்கள் எனவும் பிரதமர் அங்கு தெரிவித்தார். (ம)

# பேணாட் குணதிலக தமிழ்ச்செல்வனுடன் வன்னியில் இன்று சந்திப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேணாட் குணதிலக இன்று வன்னியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசவுள்ளார்.

இம்மாதம் 31ம் திகதி தாய்லாந்தில் இடம் பெறவுள்ள இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை சந்தித்துப் பேசுவது குறித்து தமிழ்ச்செல்வனுடன் அவர் கலந்துரையாடவுள்ளார். (ம)

### மட்டு...

முன்னரங்க பாதுகாப்பு வேலிகளை அடித்து நொருக்கி சேதப்படுத்தியதாகவும்,பொலிஸ் நிலையப் பெயர்பபலகை, ஜீப் வண்டி, மற்றும் வீதித் தடுப்புகள் ஆகியவற்றை தீ மூட்டிக் கொளுத்தியதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவங்களை அடுத்து போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்தன.

இதேவேளை மட்டுநகர் எங்கும் ஒரே பதற்றம் நிலவியதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

### கண்காணிப்புக்குழு...

தரப்பில் யாழ் குடாநாட்டு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (த-43)

### அமெரிக்க...

ரிகளின் குடாநாட்டிற்கான திடீர் விஜயம் மிகவும் இரகசியமாகப் பேணப்பட்டு வந்தமை தொடர்பாக பல்வேறு தரப்பினர் மத்தியில சந்தேகப் பார்வை தோன்றியுள்ளதுடன்,

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான தாய்லாந்து சமாதானப்பேச்சுவார்த்தை முன்னேற்றகரமாகச் சென்று கொண்டிருக்கும் இவ்வேளையில் அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் குடாநாட்டிற்கு திடீர இரகசிய விஜயம் மேற்கொண்டு இராணுவ முன்னரங்க நிலைகளைப் பார்வையிட்டமை, மற்றும் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்புக்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றமை ஆகியன பொதுமக்கள் மத்தியில் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. (த-43)

### அரசு...

தற்போது சமாதானம் கட்டியெழுப்பப்படவுள்ளது. தொடர்ந்தும் இந்தக் கொடிய யுத்தம் நீடிக்குமானால் சிறுவர்களின் பாதுகாப்பு கேள்விக்குரியதாக இருக்கும். எனவே யுத்தம் நிறுத்தப்பட்டு சிறுவர்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையே ஏற்பட்டுள்ள யுத்த நிறுதப் புரிந்துணர்வு உடன்படிக்கையை எதிர்க்கும் தென்னிலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளின நடவடிக்கை களுக்கு முற்றுப்புள்ளி வைத்தால் மட்டுமே சமாதானம் சாத்தியப்படமுடியும்.

பிரிவினைவாதக் கோட்பாடுகளை விடுத்து ஐக்கியப்படக் கூடிய கோட்பாடுகளை பின்பற்றக் கூடிய தருணம் தற்போது உருவாகியுள்ளது. பிரிவினை தொடருமானால் அதன் பாதிப்பு ஒரு பிரிவினருக்கு மாத்திரமல்ல முழுநாட்டிற்குமேயாகும்.

அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டதற்கான பலாபலன்களை நாம் அனுபவித்து விட்டோம். என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேலும் தெரிவித்துள்ளார்.

### ஜேர்மன்...

என்பது குறித்து கவனிக்கவும் இக்குழு இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)


## பிரதமர் தலைமையில் அமைச்சரவை இன்று கூடும்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும், அரசுக்கும் இடையே காணப்படும் இழுபறி நிலை தொடர்பாக ஆராய்வதற்கு பிரதமர் ரணில்விககிரமசிங்கா தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அரசுக்கும் ஜனாதிபதிக்குமிடைடேய காணப்படும் இழுபறி நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து இறுதித்தீர்மானம் எடுக்கப் படவுள்ளது.

ஜனாதிபதியுடன் இணங்கிப் போவதா? இல்லையா என்ற இறுதித்தீர்மானம் இதில் எடுக்கப் படவுள்ளது. (ம)



இந்தியாவின் கோவாவில் நேருக்குநேர் மோதியதில் விபத்துக்குள்ளான விமானத்தை படத்தில் காணலாம். இவ் விபத்தின்போது 15 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்வி அமைச்சரிடம் மாணவர்களின் ஒழுக்கம் குறித்து ஜனாதிபதி அறிக்கை கோரல்

(கொழும்பு)

நாட்டில் உள்ள பாடசாலைகளில் இடம்பெற்றுவரும் ஒழுக்க சீர்கேடுகள் தொடர்பான அறிக்கையை இம்மாதம் 30 திகதிக்கு முன்னர் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ள அக் கடிதத்தில்;

அண்மைக்காலமாகக் கொழும்பில் உள்ள பிரபல பாடசாலைகளில் மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு சீர்குலைந்து காணப்படுகிறது. கொழும்பில் பிரபல கல்லூரி மாணவர்களுக்கிடையே கைகலப்பும் ஏற்பட்டுள்ளது. எனவே இவற்றை விசாரித்து கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். (ம)

## மாடியால் விழுந்து இளைஞன் காயம்


(நராவியடி)

கஸ்தூரியர் வீதியில் அமைந்துள்ள நகைத் தொழிலகம் ஒன்றில் வேலை செய்து வந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினமிரவு மாடியில் இருந்து தவறி விழுந்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த க.சிவா (வயது 32) என்பவரே காயமடைந்தவராவார். இவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ந-265)




தற்போது லண்டனில் வசிக்கும் யாழ் மத்திய கல்லூரியின் முன்னாள் கிரிக்கெற் வீரர்களான சுரேஸ், ரமேஸ், சதீஸ் ஆகியோரினால் அன்பளிப்பாக கல்லூரிக்கு வழங்கப்பட்ட துடுப்பாட்ட மட்டைகளை விக்கெற்காப்பாளர் சுரேசின் தாயார் கல்லூரி அதிபர் இராஜதுரையிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் அணித்தலைவர் S. கார்த்தீபன் பயிற்றுநர் S. காண்டீபன் விளையாட்டுத் துறை முதல்வர் V.S.மகேந்திரன் பிரதி அதிபர் பா.நாகரட்ணம் மற்றும் கிரிக்கெற் பொறுப்பாசிரியர் F.R. ஜெயக்குமார் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



யாழ் ஏழாலை தெற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் அண்மையில் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் அரங்கேற்றப்பட்ட மேலைத்தேய வாத்திய இசைக்குழுவில் பங்கு பற்றும் மாணவர்களின் அணிவகுப்பை படத்தில் காணலாம். படம்: என்.புலேந்திரன்

**வன நாடே வள நாடு**
**அது நிலைக்க வழி கோலு**

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.